# பாரதமணி

ஆசிரியர்
கே. எஸ். வெங்கடரமணி

வருடம்
ழி மீ

விலை அணா 4

DECEMBER
1943




ஸ்களைத் தாக்கும் ஆர். ஏ. எப். விமானம்


JL
ஜை11, M38 By
N43.10.6
210086



THE BHARATA MANI, MADRAS

*Editor* : K. S. VENKATARAMANI

பொது ஜனங்களுக்கு லிவர் பிரதர்ஸ் கம்பெனியாரின் அறிக்கை நெ. 2

# விலையுயர்ந்த ஆடை



## களைப்பற்றி கவனமாயிருங்கள்

சில [illegible] முன் ஒரு ஜோடு [illegible] விலை 3½ ரூபாயிலிருந்து 12 ரூபாய் [illegible] வாசித்தோம். இந்த [illegible] மாறுதும் அவசியமான ஆடைகளுக்கு [illegible] இறது. நல்ல துணிகள் சீக்கிரம் [illegible] வண்ணானிடம் போடுவதுதான். அவன் துணிகளை முதலில் [illegible] அடித்து பிறகு இராசவஸ்துடன் கொதிக்கவைக்கிறான். இந்த [illegible] வழக்கத்தை இப்பொழுது விட்டுவிட வேண்டும். [illegible] வும், துணிகளுக்கு பாதக முண்டாகாதவாறு வெளுக்கவும் [illegible] கட்டாயப்படுத்த வேண்டும்.



## கனமான ஆடை களுக்கு

கனமான ஆடைகளைத் [illegible] தும் செய்யாதுமையும், [illegible] வேண்டியது. [illegible] டின் [illegible] வெளுக்கும் நுரை அழுக்கை நீக்கி தண்ணீரில் [illegible] துணிகளை சுத்தமாக்குகிறது. ஆனையால் அழுக்கைப் போக்குவதற்கு முதலில் செய்ய வேண்டியது ஆடைகளின் அழுக்கடைந்த பாகங்களில் ஸன்லைட் சோப்பால் நன்றாய்த் தேயுங்கள் — அதிக அழுக்கிருந்தால் நிறைய சோப் செல்லும். கனமான ஆடைகளை நன்றாய்த் தண்ணீரில் நனையுங்கள், பிறகு ஸன்லைட் தேயுங்கள். அதிக அழுக்குப்படிந்த இடங்களில் [illegible] நிறைய தேய்க்கவேண்டியது. நன்றாகக் கசக்கி எல்லா பாகங்களிலும் [illegible] செய்து, பிறகு அலசிவிட வேண்டியது. இதுதான் நல்ல வெளுக்கும் முறை. அதிக அழுக்குத் துணிகளை [illegible] போதே கொதிக்க வைக்கலாம் [illegible] ஆனால் துணிகளை [illegible] செய்யாதீர்கள். அவைகளை [illegible] வத்துடன் எரிக்காதீர்கள்.

## நேர்த்தியான ஆடைகள்

விலையுயர்ந்த, நேர்த்தியான ஆடைகளை வெளுக்க [illegible] யாள வேண்டும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் [illegible] அதில் [illegible] லக்ஸைப் போடுங்கள். அதிக நுரை [illegible] வெளுக்கவேண்டிய துணிகளை அதில் [illegible] இந்த மாதிரி கசக்குவதாலேயே அழுக்கு வெளியேறிவிடும். பிறகு நன்றாய் இரண்டு மூன்று தடவை அலசவேண்டியது. ([illegible] மேல் அச்சடித்திருக்கும் முறைகளைப் படியுங்கள்).

## கவனமாக சலவை செய்தால் லாபமிருக்கும்

இந்த [illegible] சலவை செய்யும் முறையையும், வண்ணான் [illegible] முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதிலிருந்து நல்ல [illegible] யோசித்தால் நாளடைவில் பணம் மிச்சமாகுமென்று [illegible]!

# லிவர் பிரதர்ஸ் நல்ல சோப் தயாரிப்போர்கள்

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ்
லைப்பாய் டாய்லெட் • ரினிம் • பங்கி பிராண்டு

L.COM.32-172 TM





மாத வெளியீடு

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் : 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 | தனிப்பிரதி அணா 4

| மாலை 10 | DECEMBER 1943 : சுபானு௵ மார்கழி௴ | முத்து 6 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அநுபமாவின் காதலன் ... | வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. ... | 181 |
| 2. | பழமை ... | வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி ... | 187 |
| 3. | பாக பத்திரம் ... | ரஸிகன் ... | 190 |
| 4. | காட்டு மல்லிகை ... | (மூல எழுத்தாளர்) வி. கே. நாகராஜ ராவ் (மொழிபெயர்ப்பாளர்) ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்... | 200 |
| 5. | 'களிப்புடன் வாழ்வோம்' ... | சூடாமணி ... | 204 |
| 6. | இந்தியா பொட்டலாகி வருகிறது... | மொழிபெயர்ப்பு ... | 205 |
| 7. | வலை வீச்சு ... | ... | 208 |
| 8. | வரப்பெற்றோம் ... | ... | 209 |
| 9. | மதிப்புரை ... | ... | 210 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,


விருந்தினர்கள் எப்பொழுதும் விரும்பும் மிகச்சிறந்தவை நரஸூஸ் டீயும் காபியும் தான் என்பது வீட்டு எஜமானிக்கு நன்றாகத் தெரியும்.
நரஸூஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
MNK 21.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி சேலம் தென்னிந்தியா

# இந்தியன் பாங்க்

## லிமிடெட்

*

தலைமை ஆபீஸ்:

**"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"**

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

*

லோகல் ஆபீஸ்கள்:

| | |
|---|---|
| எஸ்பிளனேட் | திருவல்லிக்கேணி |
| மயிலாப்பூர் | தியாகராய நகர் |
| புரசவாக்கம் | மவுண்டு ரோடு |

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

*

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 1,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-43உயாக) | ரூ. | 27,57,336 |
| ரிஸர்வ் நிதி | ரூ. | 28,10,800 |

**மொத்த லேவாதேவி 8 கோடிக்குமேல்**

*

**சகலவிதமான பாங்க் அலுவல்களும்**
**ஏற்றுக் கொண்டு நடத்தப்பெறும்**

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்,
சேக்ரடரி.

கலை உலகைக் கற்பனை செய்யுங்கள்; அதற்கு எல்லை காணமுடியாது.

எனினும் அதை நோக்கித் துரிதமாக முன்னேற முடியும்.

இவ்வுண்மையை எமது



# "ஐயப்பன்"

ருசுப்படுத்தும்.

இந்நாடகம் ஆலப்புழை

## பகவதி விலாஸில்

**7—12—43** முதல் தினசரி

நடைபெறும்.

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

## மதுரை தேவி பாலவிநோத சங்கீத சபையாரின்

உன்னதத் தயாரிப்பு

பூக்களின் நறுமணமும், பொன்னின் மின்னொளியும்,

கலைஞனின் கைத்திறமும்,

கலந்து உருவானது போன்ற ஒரு சித்திரம் இந்நாடகம்.

கண்டால் ஜீவசக்தி களிப்புறும். உயிர்மணி ஒலிக்கும்.

# அநுபமாவின் காதலன்

[வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.]

நதேஷ்ச்வரி என்னும் ஜில்லாவுக்குத் தன்னை ஸப்கலெக்டராக நியமித்ததில் ரவீந்திரனுக்கு இரட்டைச் சந்தோஷம். தன் சொந்த ஊருக்கே போட்டதில் ஒரு மகிழ்ச்சி. நெடுநாளாய்க் காணவேணுமென்று தான் பிரியப்பட்டுக் கொண்டிருந்த சாருவையும், அவன் சகோதரி அநுபமாவையும் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் ஆனந்தம். எனவே நதேஷச்வரிக்கு வந்து தன் வேலையை ஒப்புக்கொண்டதுதான் தாமதம்; அந்த ஜில்லாவில் விக்ரமபுரி என்னும் ஒரு சப் டிவிஷனைச் சேர்ந்த புஷ்கர கிராமத்திற்கு விரைந்தோடினான்.

அந்த ஊருக்குப் போவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. வங்க தேசத்தில் கங்கையும் பிரம்மபுத்ராவும் சேர்ந்து புரிந்திருக்கும் லீலைகளின் பயனாகப் பல இடங்களுக்குப் போக்குவரத்துச் சாதனமே கிடையாது. எங்கே பார்த்தாலும் உபநதிகளும் கிளைநதிகளும் அவைகளின் வெள்ளப் பெருக்குமே அதிகமானதால், ரஸ்தா ரயில் முதலிய வசதிகளில் ஒன்றும் அங்கு ஏற்படுத்த முடியாமல் போயிற்று. நீராவிக் கப்பல்களிலோ, சாதாரணப் படகுகளிலோதான் அத்தகைய பிரதேசங்களுக்குப் போகவேண்டும்.

இவ்வளவு கஷ்டத்திற்கும் ஈடுகொடுத்துக் கொண்டு ஊரைத் தேடிப் பிடித்தான் ரவீந்திரன். அங்கே கடைசி முறையாய்ச் சென்று சுமார் ஏழு, எட்டு வருஷங்கள் ஆகிவிட்டபடியால் முதல் முதல் அவனுக்கு அவ்வூரில் ஒன்றும் திகா புரியவில்லை. சற்றுச் சமாளித்துக் கொண்டு அங்குள்ள ஒரு கிராமவாசியைத் தன் நண்பனான சாருவைப்பற்றி விசாரித்தான். ஐரோப்பிய உடையிலிருந்த ஸாஹேபை அந்தக் கிராமவாசி ஏற இறங்க ஒருமுறை பார்த்துவிட்டுப் பின்பு,

"யாரைக் கேட்கிறீர்கள்? சாருசந்திர முகோபாத்யாயா 'பாபு'வையா? ஐயோ! ஒரு மாதம் முன்புதான் பஞ்சத்தின் கொடுமையைத் தாங்காமல் அவர் தம் சொற்ப நிலத்தையும் விற்றுவிட்டு இவ்வூரை விட்டே போய்விட்டார்!" என்று சொன்னான்.

"எங்கே போனார் என்று ஏதாவது தெரியுமா?"

"போவதற்கு இடம் என்று ஒன்று இருக்கிறதா? எங்கே சோறு கிடைக்கிறதோ அங்கேதான் போகவேணும்."

இந்த விடை கிடைத்ததும், ரவீந்திரனின் கண்களில் நீர் நிறைந்தது.

"அவனுடைய சகோதரி?" என்று மீண்டும் கேட்டான் ஆவலுடன். இக்கேள்விக்கு எத்தகைய பதில்வருமோ?— என்று உள்ளூர ரவீந்திரனுக்குப் பயம்.

"ஓ! அநுபமா தேவியா? அவளும் அவளுடைய நாலு வயதுள்ள பெண் குழந்தை மனோரமாவுங்கூடத்தான் அவனுடன் போயிருக்கிறார்கள். அவளுக்கு இனி அவன்தானே கதி! வேறு எங்கே போவாள்? நிழலைப்போல் இனி அவள் அவனைத்தான் தொடரவேணும்" என்றான் கிராமத்தான்.

"என்ன, அவள் குழந்தையா?" என்று பாதி ஆச்சரியமும் பாதி துக்கமும் கலந்த குரலில் ரவீந்திரன் திரும்பக் கேட்கவே, அம்மனிதன் கதை சொல்லுகிறவன்போல் ஆரம்பித்தான்.

"ஐயோ! அதை என் கேட்கிறீர்கள்? அது ஒருபெரியகண்ணராவிக் கதையாகி விட்டது. வயது வந்த தன் தங்கைக்குக் காலத்தில் மணஞ் செய்விக்கச் சாரு ஒரு முயற்சியும் செய்யாமலிருந்தான். யாரோ ஒரு நண்பனுக்காக அவளை வரித்து விட்டதாகவும், அவன் தானகவே ஒருநாள் வந்து அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும் கேட்போருக்குச் சொல்லி வந்தான். ஊர் கேட்குமா? கிராமாந்தர வாழ்க்கையைத்தான் நீங்கள் அறிந்திருப்பீர்களே: பலர் பலவித அவதூறு சொல்லி வந்தார்கள். இதற்கிடையில் அனுபமாவின் அழகிய மேனியைக் கண்டு மயங்கிய தன் குமாரனுக்கு இவ்வூர்-ஜமீன்தார் அவளைப் பலாத்காரமாய் மணஞ் செய்வித்தான். கல்யாணமான இரண்டாம் மாதத்தில் அந்த இளம் ஜமீன்தார் ஒரு கடுமையான நோயால் இறந்து போனன். அப்பொழுது அவள் கர்ப்பம். ஜமீன்தார் ஈவிரக்கமின்றி அவளை வீட்டிலிருந்து துரத்திவிட்டான்; அதுமுதல் தன் அண்ணன் வீட்டிலேயே வசித்து வந்தாள். இது நடந்து நாலு வருஷங்களுக்கு மேலாகிறது. கிடைத்ததைக் கொண்டு அவர்கள் வயிற்றை அலம்பி வந்ததும் தெய்வத்திற்குப் பொறுக்கவில்லைபோலும். இப்பஞ்சத்தை ஏவிக் கடவுள் அவர்களை இவ்வூரையும் விட்டு விரட்டி விட்டார். தங்கமான மனுஷ்யர் சாரு பாபு: அதற்குமேல் அநுபமா!"

இக்கதையைச் சொல்லி முடிக்கையில் அந்தக் கிராம வாசிக்கே கண் கலங்கியது. அதற்குமேல் அங்கிருக்க மனமில்லாதவனாய் ரவீந்திரன் வந்த வழியே திரும்பினான்.

## 2

ரவீந்திர மோகன் பானர்ஜியும் சாருசந்திர முகர்ஜியும் பால்ய நண்பர்கள். இருவருக்கும் சொந்த ஊர்கள், விக்ரமபூர் சப்-டிவிஷனில் தான் இருந்தன. ரவீந்திரனுடைய ஊர் ஜயநகரம் என்னும் குக்கிராமம், அதற்கு இரண்டு மைல்களுக்குள்ளிருந்த புஷ்கர கிராமம் என்னும் சிற்றூர்தான் சாருவின் சொந்தவூர். இந்த இரண்டுவூர்களுக்கும் வெகு சமீபத்திலுள்ள முன்ஷிகஞ்ச என்னும் பெரிய பட்டணத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் இருவரும் சின்ன வகுப்பிலிருந்து ஒன்றாய்ப் படித்தனர். அவர்களது படிப்பிற்கென்றே அங்கு அவர்களின் பெற்றோர் தனிக் குடித்தனம் வைத்திருந்தபடியால் பள்ளிக்கூடத்தில் ஒன்றாய்க் கழிந்த நேரம் போகப் பாக்கி வேளையிலும் ரவீந்திரன் சாருவின் வீட்டிலேதான் இருப்பான்.

இருவரும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சாருவின் தகப்பனர் தம் ஊரிலுள்ள சொற்ப நிலத்திலிருந்து கிடைத்த வரும்படியைக் கொண்டு ஜீவனம் செய்தார். ரவீந்திரனின் தந்தை அருகிலுள்ள ஒரு ஜமீன்தாரனிடம் ஒரு சிறு தொகையாகிய மாதச் சம்பளத்திற்கு ஊழியஞ்செய்து வந்தார். படிப்பில் இரண்டு பிள்ளைகளும் சமர்த்தரா யிருந்தபடியால் இருவருக்கும் உபகாரச் சம்பளம் கிடைத்தது.

முன்ஷிகஞ்சில் ஒரு காலேஜும் இருந்தபடியால் இருவரும் மெட்ரிக்யுலேஷன் படிப்பு முடிந்ததும் அதற்கு மேற்பட்ட தங்கள் உயர்தரப் படிப்பை அங்கேயே தொடங்கினர். ஆனால் துரதிர்ஷ்டவசத்தால் சாருவின் தகப்பனர் அவன் 'இன்டர்மீடியட்' பரீட்சை கொடுத்தவுடன் காலமாகிவிட்டபடியால் குடும்ப நிர்வாகக் கவலை தன்மேரில் விழவும், அவன் அதற்குமேற்கொண்டு படிப்பது என்னும் எண்ணத்தை ஒழித்து ஊருக்குப் போய்த் தன் தந்தை செய்ததுபோலவே தன் நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படியைக் கொண்டு காலட்சேபம் செய்ய ஆரம்பித்தான். அந்த 'இன்டர்மீடியட்' படிப்பிற்குத் தகுந்த வேலையொன்றைத் தேடி அலைந்து அது கிடைக்காமற் போனபின்புதான் அவன் அம்மாதிரி தீர்மானஞ் செய்தான்.

ரவீந்திரனோ பி.ஏ. வகுப்பில் சேர்ந்து படித்தான். எனினும் சாருவிடம் தனக்குள்ள நட்பைமட்டும் விட்டுவிட மனம் வரவில்லை. முன்ஷிகஞ்சிலிருந்து புஷ்கர கிராமம் ஒருமைல் தூரங்கூட இல்லை. ஆகையால் அநேகமாய் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூட நேரம்போக ஒழிந்த வேளைகளில் அவ்வூருக்குப் போய், சாருவுடன் அளவளாவிக் காலங் கழித்துவந்தான்.

ரவீந்திரனுக்கு உடன்பிறந்தோர்—சகோதர சகோதரிகள்—எவரும் இல்லை. சாருவுக்கு ஒரு தங்கைமட்டும் உண்டு. அநுபமா என்று பெயர். செக்கச்செவேலென்ற மேனி; தீர்க்கமான மூக்கும் முழியும்; ஸன்னமான தேகக்கட்டு; சிரித்த முகம்; தலை நிறையக் கறுத்து அடர்ந்த மயிர். சாருவும் ரவீந்திரனும் சம வயதினர். அவர்களுக்கு மூன்று, நாலு வயதிற்குச் சிறியவள் அநுபமா. சாருவும் ரவீந்திரனும் முன்ஷிகஞ்சில் மூன்றாய்ப் படிக்கையில் அவ்வூரிலேயே ஒரு பெண்பாடசாலையில் அவளும் படித்தாள். சாரு 'இண்டர்மீடியட்'டுடன் படிப்பை நிறுத்திக்கொண்டபொழுது மெட்ரிக்யுலேஷன் வகுப்பிற்கு ஒரு வகுப்புக்குக்கீழ் அவள் படித்து வந்தாள். அதே காரணப்பற்றியே அவள் படிப்பும் அப்படியே நின்றது.

சாருவுடன் அந்யோந்யமாயிருந்த ரவீந்திரன் அநுபமாவுடனும் நெருங்கிப் பழகியது இயற்கையே. அம்மூவரும் இணைபிரியா நட்பினராயினர். நாளடைவில் அநுபமாவுக்கும் ரவீந்திரனுக்கும் இடையில் அந்த நட்பானது காதலென்னும் நெருப்பாக ஜொலித்தது. இப்புதிய உணர்ச்சியை இருவரும் அறிந்துகொள்ள நெடுநாள் செல்லவில்லை. இது ஜாடையாக சாருவுக்கும் தெரிந்துவிட்டது. ஆனால் இவ்விருவருடைய தூய உள்ளங்களையும் குணங்களையும் நன்கு அறிந்திருந்த அவன் அதைப்பற்றிச் சந்தோஷமே அடைந்தான். அவர்களைத் தம்பதிகளாக எப்பொழுது பார்க்கப்போகிறோம் என்று ஏங்கி அத்தகைய நன்னாளை எதிர்பார்த்தவனாயிருந்தான்.

சாரு படிப்பை விட்டு அநுபமாவுடன் தன் ஊருக்குச் சென்ற பின்பு ரவீந்திரன் அங்கு வரும்போதெல்லாம், ரவீந்திரனுக்கும் அநுபமாவுக்கும் தனித்துச் சந்தித்து ஒருவரோடொருவர் சல்லாபம் செய்யச் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. சாருவும் தன்னாலானவரையில் அதற்கு அநுசரணையாகவே நடந்துகொண்டான். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் அவர்களுக்கு இடையே அடியில் கண்ட சம்பாஷணை நடந்தது:

சாரு:—அநு! நீ என்னைக் காதலிக்கிறாயா? நானும் என் தைரியத்தையெல்லாம் ஒன்று சேர்த்துத் திரட்டி இன்று வாய்விட்டுக் கேட்டேவிட்டேன்!

அநு:—(சற்றுநேரம் மௌனமாயிருந்த பின்பு) ரவி! என்னைக் கேட்கவும் வேணுமா? அது உனக்கே தெரியாதா? ஆனால்—உம்!—

ரவி:—ஆனால் என்ன? அநு! (அவள் கைகளை மெள்ளப் பிடித்துத் தன் அருகே இழுத்துக்கொண்டான்.)

அ:—நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே. நான் உன்னைக் காதலிப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல் அல்லவா?

ர:—என்ன அப்படிச் சொல்லுகிறாய் அநு!

அ:—நாளைக்கு நீ 'பி.ஏ.,' 'எம்.ஏ.,' எல்லாம் படிப்பாய்! 'ஐ.ஸி. எஸ்' கூடத் தேறிவிடுவாய். உனக்கு எவ்வளவோ பெரிய பெரிய...உம்! அப்பொழுது இந்த ஏழையை எவர் லட்சியம் செய்வார்? இப்பொழுதே நீ இங்கு வந்து எங்களுடன் நட்புக் கொண்டாடுவதை உன் தகப்பனார் விரும்பவில்லையாம்.

இதைச் சொன்னவுடன் கண்ணில் நீர் ததும்பியவளாய் அநுபமா அவன் முகத்தை நேராக நோக்கிப் பார்க்க

மனம் வராமல் தரையைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

ர:—அநு! சுவாமி சாட்சியாக உன்னைத் தவிர இப்பிறப்பில் நான் வேறு ஒரு பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். எனக்கு 'ஐ.ஸி.எஸ்' பதவியே கிட்டினாலும் இது உண்மையே.

அப்பொழுது ரவீந்திரனுக்கு வயது பத்தொன்பது. அநுபமாவுக்குப் பதினாறு பிராயம்.

3

முன்ஷிகஞ்சில் 'பி. ஏ.' படிப்பு முடிந்ததும் ரவீந்திரனின் மேற் படிப்பிற்காக அவன் தாய் தந்தையர்கள் கல்கத்தாவுக்குப் பயணமாயினர். 'பி. ஏ.' யில் முதலாகத் தேறியதனாலேயே அவனுக்குப் பெண் கொடுக்கப் போட்டி ஏற்பட்டது. அவனோ அநுபமாவைத் தவிர வேறு ஒருவரையும் மணக்க முடியாதென்று ஒரே பிடிவாதமாயிருந்தான். அவன் பெற்றோர்கள் அதற்கு இணங்கவில்லை. பிரம்மசாரியாயிருந்தாலும் இருப்பதேயொழியத் தான் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பிறழ்வதில்லை யென்று மனத்தைத் திடம் செய்துவிட்டான்.

யாராவது பெண்ணைக்கொடுத்து மேற்படிப்புக்கு வேண்டிய செலவை ஏற்றுக் கொண்டால்தான் அவனுக்கு 'எம். ஏ.' முதலிய உயர்தரப் படிப்புகள் சாத்தியமாகும். அவன் சதா அநுபமாவின் ஸ்மரணையில் இருந்ததால் அவனுக்கும் அவன் பெற்றோர்களுக்கும் மனஸ்தாயம் முற்றிக் கடைசியில் அவர்கள் அவனைத் தங்களுக்கு அடங்காத பிள்ளை யென்று வீட்டைவிட்டு விரட்டிவிட்டனர். அவன் அதையும் பொருட்படுத்தவில்லை. உடனே புஷ்கர கிராமத்திற்குச் சென்று கடைசி முறையாக அநுபமாவையும் சாருவையும் பார்த்து, தான் எப்படியும் மேற்படிப்பைப் படித்துத் தகுந்த ஓர் உயர்ந்த உத்தியோகத்தைத் தேடப் போவதாயும், அது கிடைத்தவுடன் வந்து அநுபமாவை மணந்து கொள்வதாயும் சொல்லிவிட்டு, அங்கிருந்து கல்கத்தாவை நோக்கிப் புறப்பட்டான்.

பலர் உதவியைக் கொண்டும், தன் திறமையினால் கிட்டிய உபகாரச் சம்பளத்தினாலும், 'எம். ஏ' படிப்பை இரண்டு வருஷங்களில் படித்து முடித்தான். அவ்வளவு படிப்பிருந்தும் கையில் பணமில்லாததால் ஒரு வருஷம் நாடோடியாய் வாசஞ் செய்ய வேண்டியிருந்தது. பின்பு அதிர்ஷ்டவசத்தால் ஒரு 'கமிட்டி'யின் அங்கத்தினராய்ச் சீமைக்குச் செல்லவேண்டிய ஒரு, வங்க நாட்டுப் பிரமுகருக்குக் காரியதரிசியாய் அமர்ந்து தானும் சீமைக்குச் சென்றான். அங்கு அவர் அளித்த பண உதவியைக் கொண்டு 'ஐ. ஸி. எஸ்' பரீட்சையில் தேறினான். அதற்குப் பின் சர்க்கார் விதித்திருந்தபடி சட்டம் முதலிய தன்னுடைய 'ஐ. ஸி. எஸ்' வேலை சம்பந்தமான படிப்பிற்காக 'ஆக்ஸ்போர்டு' சர்வகலாசாலையில் ஒரு வருஷம் தங்கவேண்டியிருந்தது. அது முடிந்ததும் அவன் இந்தியாவுக்குப் பிரயாணமாகையில் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கிற்று. ஆகையால் அவனை 'இந்தியா ஆபீஸி'லே வேலை செய்யச் சொன்னார்கள். யுத்தத்தின் நாலாம் வருஷ இறுதியில் கப்பல்—நிலைமை கொஞ்சம் அபிவிருத்தியடையவே, அவன் இந்தியாவுக்குப் புறப்பட உத்தரவு கொடுத்தனர். தான் திரும்பிவரும் நற்செய்தியை முன் கூட்டியே அநுபமாவுக்கும் சாருவுக்கும் விமானத் தபால் மூலம் தெரியப்படுத்தினான். ஆனால் அக்கடிதம் அவனுக்கே கல்கத்தாவில் திரும்பி வந்து சேர்ந்தது. இதைக் கண்டதும், அநுபமா என்ன கதியானாளோ என்னும் பீதி அவனுக்கு உண்டாயிற்று.

* * *

## 4

தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தன்னை நியமித்ததும் ஏற்கெனவே கூறியபடி அவன் புஷ்கர கிராமத்திற்குப் போய் அநுபமாவையும் சாருவையும் தேடி, அவர்களைக் காணாதது மட்டுமன்றி அவளுக்கு மணமாகிவிட்டதாயும் கேள்விப்பட்டதும், மனமுடைந்து திரும்பி வந்தான். யுத்தத்தின் அஞ்சாம் வருஷத்தில் வங்க மாகாணத்தில் உண்டான கொடிய பஞ்சநிவாரணத் தொண்டில் ஈடுபட்டு அதில் தன் மனப் புண்ணை ஆற்றிக்கொள்ள நிச்சயித்தான்.

ஆபீஸ் வேலை போக மீதி நேரத்தில் பஞ்சத்தை ஒழிக்க நிதி திரட்டுவது, அதற்கு அரிசி முதலிய தானியங்கள் வாங்குவது, அவைகளைக் கொண்டு கஞ்சித் தொட்டிகள் வைப்பது, நாட்கணக்கில் உணவையே பார்க்காதவர்களும் ஒரு வாய் - ஈரக்கஞ்சிக்குப் பறந்துகொண்டிருப்பவர்களுமான ஜனங்களுக்குத் தானே கஞ்சி வார்ப்பது, இவை போன்ற வேலைகளை மேற்கொண்டான்.

ஒருநாள் இத்தொண்டில் முனைந்து ஈடுபட்டிருக்கையில், வார்த்த கஞ்சியைக் கையில் ஒரு மட்கலத்தில் ஏந்திக்கொண்டு கூட்டத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவராகக் கலைந்துகொண்டிருந்தனர். கடைசியில் ஒருவன் மட்டும் மிச்சம். கஞ்சி தங்கிய சட்டியை ஏந்திய அவன் கை நடுங்கவும், சட்டி தவறிக் கீழே விழுந்தது. அதைப் பிடித்துச் கொஞ்ச நஞ்சம் அதில் ஒட்டிக்கொண்டிருந்த கஞ்சியை நக்கிக் குடிக்கலாமென்று அவன் முயலுகையில் அருகிலிருந்த ஒருநாய் அவனை ஏமாற்றி அச்சட்டியைக் கவ்வி எடுத்துக்கொண்டுபோய் மிஞ்சியிருந்த கஞ்சியை நக்கிக் குடித்துவிட்டது. மீண்டும் வாய்விட்டுக் 'கஞ்சி' என்று கேட்க நா எழாதவனைய் அவன் சப் கலெக்டரின் முகத்தை அண்ணாந்து பார்த்தான். அப்படிப் பார்த்தவன் சற்றுநேரம் ஸ்தம்பித்து விட்டான். தன் கண்களை நன்றாய்த் துடைத்துக் கொண்டு திரும்பவும் சப் கலெக்டரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். உடனே,

"ரவி" என்று கூக்குரலிடவே, அதனால் உண்டான அதிர்ச்சியைத் தாங்காமல் பொத்தென்று கீழே விழுந்து மயக்கமுற்றான்.

ரவீந்திரனுக்கும் அவன் சாருதான் என்று எளிதில் விளங்கிவிட்டது. அருகிலிருந்த சில சர்க்கார் வைத்தியர்களைக் கொண்டு அவனுக்குத் தக்க சிகிச்சைகளைச் செய்வித்து அவன் மயக்கத்தைத் தெளியவைத்தான்.

ஸ்மரணை வந்தவுடன் அவனைப் பார்த்து, "சாரு! நான் ரவிதான். இக் கதியில் உன்னைப் பார்க்கும்படி நான் என்ன பாபஞ் செய்தேனோ? அனு எங்கே? உயிருடன் இருக்கிறாளா?" என்று கேட்டான்.

பதிலளிக்கச் சக்தியற்றவனாய்த் தெருவின் ஒருபுறம் துணியால் மூடப்பட்டிருந்த ஒரு மனித உருவத்தைச் சுட்டிக்காட்டினான் சாரு படுத்தபடியே.

ரவீந்திரனின் கண்களிலிருந்து நீர் மலமலவென்று சுரந்தது. சாரு காட்டிய அவ்வுருவத்தினருகே ஓடினான். அநுபமாவின் வதங்கிய முகம் தெரிந்தது. பலத்த சுரம்; உயிர் துடித்துக்கொண்டிருந்தது. அவளை உடனே அவ்வூரிலுள்ள பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அங்கு வெகுஜாக்கிரதையாய்ச் சிகிச்சை செய்யச்சொல்லி அருகிலிருந்த வைத்தியர்களுக்கு உத்தரவிட்டான்.

அவர்கள் அநுபமாவை ஓர் 'ஆம்புலன்ஸ்' வண்டியில் எடுத்துப்போன பின்பு, அருகில் படுத்திருந்த ஒரு நாலு வயதுள்ள பெண் குழந்தையை ரவீந்திரன் கண்டான். முகத்தில் அநுபமாவின் ஜாடையை அப்படியே உரித்து வைத்திருந்தது. ஆனால் அது உயிரற்ற சவமாய்க் கிடந்தது. அதன் கால்களின் சில பாகங்களை இரவில் நரியோ, நாயோ தின்றிருந்ததையும் கண்டான்.

சகிக்க முடியவில்லை. அதைத் தகனம் செய்ய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, சாருவிடம் திரும்பி வந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் பசியால் மறுமுறை மயக்கங்கொண்டிருந்த சாருவையும் ஓர் 'ஆம்புலன்ஸ்' வண்டியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பினான்.

## 5

அவ்வூர்ப் பெரிய ஆஸ்பத்திரியாகிய 'மிட்போர்டு' வைத்திய சாலையில் சாருவும் அநுபமாவும் குணமடைந்து கொண்டு வந்தனர். பூர்ணமாய்ச் சொஸ்தமானவுடன் இருவரும் சப்கலெக்டர் பங்களாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அதுமுதல் அங்கேயே வாசஞ் செய்ய ஆரம்பித்தனர்.

ஒருநாள் ரவீந்திரனும் அநுபமாவும் தனித்திருக்கையில் ரவீந்திரன் அவளை நோக்கி,

"அநு! இப்பொழுது என்ன ஆக்ஷேபணை நம் கோரிக்கையை நிறைவேற்ற?" என்று கேட்டான்.

"ஐயோ, ரவி! நீயோ ஒரு சிறந்த தியாகமூர்த்தியாய் விளங்குகிறாய்: என்ன உத்தமமான குணம்! நான் முன்புபோல் பரிசுத்தமாயில்லையே! என் கதை உனக்குத் தெரியாதா?" என்று அநுபமா பதில் அளித்தாள்.

ரவீந்திரன், "எல்லாம் எனக்குத் தெரிந்துவிட்டது. மனம் ஒப்பாமல் நடந்தது மணமாகுமா?" என்று கேட்டான்.

அதற்கு அவள், "அதுவும் தெரிந்துவிட்டதா? ஆனால், இதையெல்லாம் யார் நம்புவார்? உலகத்தார்முன் நான் ஒரு விதவைதானே?" என்று சொல்லிப் பலபலவென்று கண்ணீர் உதிர்த்தாள்.

"அநு! என் கண்மணி!" என்றான் ரவீந்திரன். "அதற்குமேல் பேச்சு வெளிவரக் கூடாமல் அவன் நெஞ்சை அடைத்தது.

ரவீந்திரமோகன் பானர்ஜி இப்பொழுது மேதினிபுரத்தில் சப் கலெக்டர். அவன் மனைவி அநுபமா பானர்ஜியும், மைத்துனன் சாருசந்திர முகர்ஜியுந்தான் அவ்வூரிலுள்ள பஞ்ச நிவாரணக் கஞ்சித் தொட்டிகளுக்குப் பிரதம மேற்பார்வையாளர்கள்.

---

பதவி மோகத்தை விட்டு ஒழித்த மானிடருமில்லை. வாழ்வதில் ஆசையிலிருந்து விலகியவருமில்லை. உலகில் களைத்துச் சளைத்துச் சோர்ந்து நிற்கலாம். ஆனால் மனமொப்பி இறக்க விரும்புகிறவர் ஒருவருமில்லை. இதைச் சுலபமாய், வெகுளியாய் ஒப்புக்கொள்ள மனம் கொண்டவருமில்லை.

—மாஸ்தி வேங்கடேச அய்யங்கார்

# பழமை

[வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி]

**வ**ன முல்லைக்குத்தான் என்ன வாசனை! ஏன், மற்ற மலர்களைவிட அழகில் அது என்ன குறைந்ததா? இல்லை. ஆனால், அதைத் திரும்பிப் பார்ப்பவர் கூடக் கிடையாது. 'லேடி கனகாம்பரத்தி'ற்கு மணமில்லாவிட்டால் என்ன? நிறம் கண்ணைக் கவர்கிறது. தலையை வாரி முடிந்துகொண்டு கனகாம்பரத்தையும் சூடிக்கொண்டால், நம் நாட்டுப் பெண்களின் அழகு வேறு தான்!

"நம்மைக் கவனிப்பார்கூட இல்லையே! எதற்காக நாள் தவறாமல் மணம் கமழ மலரவேணும்?" என்று வனமுல்லை சிறிதும் யோசிப்பது கிடையாது. "காட்டிலிருந்தாலும் நாட்டிலிருந்தாலும், 'பிறர் என்னை நாடினாலும் நாடாவிட்டாலும், நான் எனது முழு வனப்புடன் தான் விளங்குவேன்!" என்று பிடிவாதம் செய்கிறது.

சில மனிதர்களின் மனமும் இவ்வாறு அடாத பிடிவாதம் செய்கிறது. ஒருவன் பொய்யே சொல்வதில்லை என்றாலும், அதில் விசேஷப் பயனில்லை. பொய்யன் என்று பெயர் எடுக்காமலிருந்தால், அதுவே போதுமானது. மனத்தில் இருப்பதை யார் உட்புகுந்து பார்க்கப் போகிறார்கள்? இவ்வுண்மையை அரிச்சந்திரன் அறிந்திருந்தும், வீண் பிடிவாதம் செய்தான். அதன் பயனையும் பல்லாண்டுகள் அனுபவித்தான். "எத்தகைய துன்பம் நேரிட்டாலும் நான் உண்மையே உரைப்பேன்" என்று பிடிவாதம் செய்தல் உலக இயல்பிற்கு ஏற்றதன்று. நமது செயல்களுக்குச் சீரும் சிறப்பும் வெளியில் அல்லாது உள்ளே இருப்பதில் பயனில்லை. இவ்வுண்மையை நம்முன்னோர் அறிந்தார்களோ, இல்லையோ—அவர்கள் செயல் அனைத்தும் இதற்கு நேர்மாறாக, 'அறிவாளிகள்' இகழும்படியே இருந்தனவென்று சொல்லத் தோன்றுகிறது.

கர்ணனைப் பாருங்கள். அவன் வள்ளல் என்று உலகம் முழுதும் புகழ் பெற்றுவிட்டது. பிறகும், இந்திரன் வேண்டினான் என்று தன் கவசத்தையும் குண்டலத்தையும் கொடுத்துவிட்டது மதியற்ற செயல் அல்லவா? கொடையாளி என்ற பெருமையே அவனை உயிர் துறக்கச் செய்தது. கர்ணனையே நம்பிய கௌரவர்கள் உற்ற தோல்விக்கும் அது காரணம். சூரியன் தன் மகனின் மதிக்குறைவை நன்கு உணர்ந்திருந்தான். ஆகவே அவன் முன்னே வந்து, "இந்திரன் உன்னிடம் வந்து கவச குண்டலங்களை யாசிப்பான். நீ கொடுக்க மறுத்துவிடு. உனது உயிருக்கு உலை வைக்கவே பாண்டவர்கள் இத்தகைய சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்!" என்று தன்னால் இயன்ற மட்டில் போதித்தான். என்ன பயன்? "தேவேந்திரன் மூவுலகிற்கும் அரசன், தேவர்களுக்கும் தேவன். இவன் என்னை நாடி என் வீட்டு வாசலில் வந்து வேண்டினால், உபயோகமற்ற இப்பழைய கவசத்தையும் குண்டலத்தையுமா கொடுக்க மறுப்பேன்? ஒரு நாளும் இல்லை. இத்தகைய யாசகனுக்கு உவந்த எதையும் நான் கொடுத்து என் மனத்தைத் தேற்றிக் கொள்வேன்" என்றெல்லாம் புலம்பித் தவித்தான்.

இந்நிகழ்ச்சிகள் நடந்து இன்று எவ்வளவோ காலமாகிவிட்டது. இப்பொழுதுதான் நம் நாட்டு மக்கள் இவ்விதச் செயல்களைக் கைவிடத் துணிந்திருக்கிறார்கள். "ஈவு, இரக்கம் முதலிய குணங்களைக் கைப்பற்றி நடப்போருக்

குச் சற்றேனும் இன்பம் இல்லை. ஆத்ம குணங்கள் மனிதனை மீளாத் துன்பத்தில் ஆழ்த்தும். உலகில் நாலு பேருக்கு நல்லவன் எனத் தோன்றுமாறு நடப்பதைவிட அதிகமான குணங்கள் வாழ்வில் மனிதனுக்குப் பயன் அளியா'' என்ற உயர்ந்த தத்துவங்களை இக்காலத்தில்தான் நம் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இந்த அரிய பாடத்தை நமக்குப் புகட்டிய பரமாசிரியர் வெள்ளையர் என்றால் சிறிதும் தவறில்லை. தொன்று தொட்டு நம்மிடம் குடிகொண்டிருந்த குணங்களை இரண்டு நூற்றாண்டில் எளிதில் அகற்றிவிட்டு வாழ்க்கைக்கு ஏற்ற உண்மைகளை நம் மனத்தில் பதிய வைத்தார்கள். ஆனால் இந்நாடு முழுவதிலும் இவர்கள் உபதேசம் இன்னும் பரவிவிடவில்லை.

திக்கற்றுத் தவிக்கும் தருணத்தில் ஒரு மேல்நாட்டாரை உதவிவேண்டினால் 'வருந்துகிறேன்!' என்று கூறிவிட்டு வேகமாய்ச் சென்றுவிடுவார். உதவி கேட்டவர், 'ஐயோ!பாவம்! நம் வேண்டுகோளால் அவருக்கும் துன்பம் விளைவித்துவிட்டோமே' என்று தம் துயரத்தோடு இவ்வருத்தத்தையும் சேர்த்துப் பின்னும் துயரப்படுவார்: இப்படிப்பட்ட மக்கள் இன்னும் நம் நாட்டில் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். ஒருவனை நமக்குப் பிடிக்காவிட்டால், தேனினும் இனிய மொழியில், 'தயவுசெய்து வெளியே போகலாம்' என்று வீட்டைவிட்டு வெளியேற்ற நம் நாட்டு மக்களுக்குத் திறன் உண்டாக எத்தனையோ ஆண்டுகள் செல்லவேண்டும்! வெளித் தோற்றங்களுக்கு ஏற்றவாறுநடப்பதே மனித வாழ்வின் நோக்கம் என்பது இவர்களுக்குச் சிறிதும் தெரியாது.

உள்ளும் புறமும் ஒருங்கே மாசற்றுத் துலங்கவேண்டும் என்று நம் முன்னோர் எவ்வளவோ பாடுபட்டும், துன்பம்தான் மீதியாயிற்று. அவர்களுடைய செயல்கள், முன்னேற்றம் பெற்ற இக்காலத்து மக்களுக்குமிகுந்தநகைப்புக்கு இடமாகவேயிருக்கும். அக்காலம், புத்தி வன்மை மேவிடாமல் இருந்த காலம்! ஆத்ம குணங்கள் எனச் சிலவற்றைக் கைப்பற்றி வாழ்நாளை அவர்கள் பாழாக்கிக்கொண்டிருந்ததைப் பார்த்தால் நாம் வியக்கவேண்டியதுதான்! பழமையின் கோலத்தைச் சரியான முறையில் விளக்கும் ஒரு கதை எனக்கு நினைவு வருகிறது.

சூரிய குலத்தில் உதித்த ஓர் அரசன். அவன் உலகனைத்தையும் வென்று தன் பொக்கிஷத்தை நிரப்பியிருந்தான். விச்வஜித் என்ற யாகத்தில் அவன் தன் செல்வம் அனைத்தையும் யாசகருக்கு அளித்துவிட்டான். யாகத்தை நிறைவேற்றுவதற்குக்கூட மண்கலயங்களையே உபயோகிக்கும்படி நேர்ந்துவிட்டது. அரசன் அப்பொழுது கதிர்கொய்த மரம்போல் நின்றான். இத்தருணத்தில் குருதட்சிணைக்காகப் பதினாறு கோடிப் பொன் யாசித்து வாங்கலாம் என்ற நினைப்புடன் அவ்வரசனிடம் கௌத்ஸர் என்ற ஒரு முனிவர் வந்தார். அங்கு மண்கலயங்களைக் கண்ணுற்றதும் அவர் ஆசை குன்றிவிட்டது. எப்படியாகிலும் குருதட்சிணையை யாரிடமிருந்தாவது வாங்கிக் கொடுத்துவிடவேண்டும் என்று தீர்மானித்து வெளியே புறப்பட்டார் முனிவர். அரசன் அவரை வழிமறித்து, அவர் வந்த காரியத்தைக் கேட்டான். பிறகு அவரைப் பலவந்தமாக, "தாங்கள் போகக்கூடாது. குருதட்சிணைக்காக முனிவர் ஒருவர் என்னிடம் வந்து தம் விருப்பம் நிறைவேறாமல் மற்றொரு வள்ளலை அடைந்தார் என்ற அவமதிப்பு எனக்குப் புதிதாக வேண்டாம். தயவுசெய்து இங்கேயே இருக்கவேண்டும். தங்களுக்கு வேண்டிய குருதட்சிணையை நான் கொடுக்கிறேன்!" என்று வாக்களித்தான்.

புலி, சிங்கங்களைவிட யாசகன் என்றால் இந்நாளில் ஜனங்கள் பயப்படுவது வழக்கம். யாசகன் வந்துவிட்டுத் தானாகப் போவது சாமானிய அதிர்ஷ்டமல்ல! இதை அறியாத அரசன் முனிவரை வழி மறித்து நிறுத்தினான். பிறகு அவனுக்குத் தன் வார்த்தையை நிலைநாட்ட

வழியில்லாமல் கவலே அதிகரித்துவிட்டது. கடைசியாக "குபேரனை நாம் போரில் வென்று அவனிடமிருந்து ஏராளமான சொத்தைக் கொண்டுவர வேண்டும்" என்று தீர்மானித்தான். முன்னேற்பாடுகள் அனைத்தும் நடந்து விட்டன. இதை அறிந்த குபேரன் பயந்து அரசன் பொக்கிஷத்தில் பொன் மழை பொழிந்தான். அரசன் முனிவரை அழைத்து அத்தங்கம் அனைத்தையும் எடுத்துக் கொள்ள உத்தரவிட்டான். அவர் பதினுலு கோடிப் பொன்மட்டும் எண்ணி எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அரசன் அவரைத்தடுத்து,"குபேரன் அவருக்காகவே தங்கமாரி சொரிந்தான். அதை விடாமல் எடுத்துச் செல்லவேண்டும்" எனப் பிரார்த்தித்தான். முனிவரோ "என் ஆசிரியருக்குப் பதினுலு கோடிதான் வேண்டும். அதற்குமேல் எனக்கு உபயோகமில்லை" என மறுக்கவே, இருவருக்கும் தகராறு முற்றிவிட்டது. அந்நகர மக்கள் இவ்விருவருடைய மனத்தையும் கண்டு வியந்தார்களாம். இவ்வரசன்தான் இராமர் வமிசத்திற்கே தலைவனுகிய ரகு.

இக்காலத்திலுள்ளவர்கள் ரகுவினுடைய இயல்பைப்பற்றி நினைக்கவும் இயலாது. அம் மனப்பான்மையைப் புகழும் பேதைமக்களும் இந்நூற்ருண்டில் இல்லை! அரசன் மனத்திற்கேற்ற யாசகனும், அவ்விருவருக்கும் உவந்த நகரமக்களும், இவ்வனைத்தையும் எண்ணி எண்ணி மட்டில்லாத மகிழ்ச்சி கொண்டு அதைக் காவியத்தில் சித்திரிக்கும் கவிஞனும் எல்லாம் பண்டைக் காலத்திற்கு ஏற்றபடியே அமைந்துவிட்டார்கள். காளிதாஸனுக்கு இத்தகைய விஷயங்களில்தான் மோகம். ஆகவே, தன் காவியத்தில் விரிவாக வரைந்துவிட்டான். இம்மாதிரி மற்ருெரு நிகழ்ச்சியையும் அவன் காவியத்திலே காணலாம்.

இவ்வேந்தனும் சூரிய வமிசத்தவன். வேட்டையாடுவதற்காகப் பெரியதோர் ஆரவாரத்துடன் காட்டுக்குச் சென்ருன். முதல் முதலாக அவன் ஒரு மான் கூட்டத்தைக் கண்டான். ஓர் ஆண்மான்மீது அம்பு எய்வதற்குக் குறிவைத்து நாணை இழுத்துக்கொண்டிருந்தான். உடனே அதைக் கண்டு உடல் நடுங்கிய ஒரு பெண்மான் அம்மானை மறைத்துக்கொண்டு முன்பு வந்து நின்றது. தன் உயிரைக் கொடுத்தேனும் தன் காதலனைக் காப்பது கடமையாக அப்பெண்மான் நினைத்தது போலும்! அரசன் அதைக் கண்டு மனமிரங்கி, எடுத்த அம்பை அம்பருத்தூணியில் போட்டுவிட்டான்.

இச்செய்கை அரசனுக்கு ஏற்றதா— என்று இக்காலத்துச் சர்வாதிகாரிகளிடமல்லவா கேட்கவேண்டும்? நிரபராதிகளான குழந்தைகளும் பெண்களும் கன்றுகளும் மாடுகளும் இறக்குமே என்று ஏங்கினல், ஹிட்லர் தம் குண்டுகளை எங்கு வீசுவார்? அம்மன்னன் இவ்வாறு இரக்கத்தையும் தயவையும் கட்டிவைத்துவிட்டு வாழ்நாள் நடத்த இக்காலத்து அரசர்களிடமல்லவோ கற்கவேண்டும்? இது புதிய சகாப்தம் நம்பாரத நாட்டுக்கு. வாழ்நாளைக் கூடியவரையில் இன்புறச் செய்வதற்கான புதுவழிகளை அயல் நாடுகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டு வருகிறோம். பழமையை விலக்கி நம்மையும் சீர்திருத்திக் கொள்வதில் முயன்றிருக்கிறோம். ஆனல் பழமையை நாம் மறந்துவிடாமல் ஒதுக்கி வைப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் பழமையே கொஞ்சநாளில் புதுமை வேஷம் பூண்டு நம் வாழ்வில் கலந்துவிடும். ஏன்? உலக சக்கரம் புரளும்போது அப்பழைய சகாப்தமும் புரண்டு மீண்டும் மேலே வராமல் போகுமா? அதுபற்றியே அறிஞர்கள் நன்மை தீமையென்று சீர்தூக்கி, வேண்டியதைமட்டும் கைக்கொள்கிருர்கள். பழமை, புதுமை என்ற வேற்றுமை அவர்களுக்கில்லை. இதைத்தான் காளிதாசன் விளக்குகிருன்:

"பண்டைக் காலத்தில் உள்ளது என்பதனுலேயே ஒன்றை உயர்த்துவது

நாடகம்

# பாகபத்திரம்

[ரஸிகன்]

## அங்கம் - 3

### காட்சி - 1

(மேற்படி சம்பவங்களுக்கு மறுநாள் போக மறுநாள் சாயந்திரம் விளக்குவைக்கும் சமயம். நீலகண்டய்யர், வீட்டுத் திண்ணையில் ஜபம் பண்ணிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். கிழக்கேயிருந்து ஒரு வண்டி வந்து கணக்குப் பிள்ளை வீட்டு வாசலில் நிற்கிறது. ஒரு பெண்ணும் இரண்டு புருஷர்களும் வண்டியைவிட்டு இறங்கி உள்ளே போகிறார்கள். வெளிச்சக் குறைவால் முகம் நன்றாய்த் தெரியாமல்போனாலும் தெரிந்த ஆசாமிகள் போலப்படுகிறது. கால் மணி நேரத்தில் சீதாராமன் பெண்சாதி பட்டம்மாளும் தன் பாரியை காமாக்ஷியும் கிழக்கேயிருந்து வந்து ஆனோடியில் ஏறுகிறார்கள். பட்டம்மாள் வேகமாக உள்ளே செல்கிறாள். காமாக்ஷி, நீலகண்டய்யர் திண்ணையிலிருப்பதைப் பார்த்துத் தயங்குகிறாள்.)

நீ :—எப்போ ?

கா :—சித்தெமின்னடி வந்தாப்பிலே ருக்கு. கோவிலுக்குப் போயிட்டு வந்தேன். கணக்குப்புள்ளை யாத்து வாசலிலே வண்டி நின்னுது. திண்ணேலே கணக்குப்புள்ளெ, ஒங்க தம்பி, நாத்தனார் ஆத்துக்காரர் எல்லாரும் ஒக்காந்திருந்தா.

நீ :—ஜமா சரியாத்தான் சேந்திருக்காப்பிலேருக்கு.

கா :—எற்பாடு பலமா நடக்கராப்பிலேதானிருக்கு. பேச்சுக்குரல் கேட்டுது. உள்ளே போனேன். ஒங்க நாட்டுப்பொண் ஒக்காந்தா என்னைக் கண்டதும் பாக்காதுபோலே திரும்பிண்டா. "எப்போடீ வந்தே?"ன்னேன். தலையை அசக்கினா. "ஆத்துக்கு வரப்படாதோ? இங்கே என்ன விசேஷம்?"னு கேட்டேன். அவ ஒண்ணும் பதில் சொல்லல்லே. அதுக்குள்ளே கணக்குப்புள்ளை ஆம்படையா "அது என்னவோ தெரியல்லெ. சீதாராமன்——"னு என்னவோ சொல்ல வாயெடுத்தா. எனக்குக் கேக்க வேண்டியிருக்கல்லெ. "அது எதாவது இருக்கட்டும். சாயந்திர வேளேலே ஊருக்கு வந்துட்டு பொறத்தியாராத்திலே ஒக்காந்திருப்பானேன்? ஆத்துக்குவா"ன்னு கூப்பிட்டேன். பதிலே சொல்லல்லே, செவராட்டமா நின்னா. எனக்குக் கோவம் வந்துட்டுது. "தனியாப் போகணும்னா இங்கே ஒத்தரும் புடிச்சுக் கிடிச்சு வெச்சுக்கத் தயாராயில்லே, குசாலாப் போகட்டும். ஆனா அதுக்கு ஒருநாளெக் கெழமையைப் பாக்கவாண்டாமா? எட்டு வருஷமாயிருந்த வீட்டிலே இன்னம் ரெண்டுநாள் முள்ளுமேலே இருக்காப்பிலே யிருந்துட்டு அப்பரம் ஒங்க இஷ்டம் போலெ செய்யலாம், எழுந்துவா"ன்னு அதட்டினேன். பேசாமெ வந்துட்டா. ஆம்படையாங்காரனும் திண்ணேலே ஒக்காந்து பாத்துண்டுதான் இருந்தான்,

கஷ்டம். புதிது என்பதனாலேயே ஒன்றை இகழ்வதும் சிரமம்தான். அறிவாளிகள் சீர்தூக்கிப் பார்த்து, நன்மையைக் கைக்கொள்வார்கள். அறிவற்றவனே தனது அனுபவம் இல்லாமல் பிறர் கூறுவதைப் பின் தொடர்வான்."

நல்ல ரஸிகனாயின் மணமில்லாத கனகாம்பரத்தை நிமிர்ந்தும் பாரான்; கானகத்தில் இருந்தாலும் மணம் மிகுந்த வன முல்லையையே அவன் தேடிச் செல்வான்.

இடிச்ச புளியாட்டமா. வாயைத் தாக் கல்லெ.

நீ :—ஒனக்குப் புத்தி கடையாது. வேணுமானு நாய் தானே வாது. பாக்கு வெச்சு அழைக்கப் போனியோ ?

கா :—போறும் போறும், நீங்க பாட்டுக்கு எதையானும் பண்ணிப்படாது, அப்பரம் எம்மண்டையை எல்லாருமா உருட்டராது. அன்னிக்கு அத்தனமளம் சொன்னேனே, அவா திண்ணேலே இருக்கரபோது கூப்படாமே வரலாமா சாப்படரத்துக்குன்னு ? அசட்டுக்கு ஆங்காரம்னு தெரிஞ்சுதானே யிருக்கு? அப்படி யிருக்கச்சே, 'அந்தக் கழுதையை நான் கூப்படமாட்டேன், மத்தியானந்தின்ன பழையதையே போய்த் திங்கட்டும் 'னேனே. அப்பொபோவெ நெனச்சேன் 'இது அநாவசியச் சண்டைக்குத்தான்' னு. நான் சொன்னு வாயடி கையடி அடிச்சுப்புடுவேள் !

நீ :—ஆகா, ஒங்க சொல்படியே கேக்கரேன் !

கா :—என் சொல்படி நீங்க கேக்கக் கெக்கவாண்டாம் ! எனக்கென்ன அவ்வளவு அந்தஸ்தா வந்துட்டுது? உள்ளே போய் எலேயைப்போடரேன். அவாளேச் சாப்படக் கூப்புடச் சொல்லுங்கோ. அன்னியாட்டமாப் பேசாமே யிருக்குதாதேயுங்கோ.

நீ :—(கோபமாய்) ஒன் வேலேயைப் பாரு. ஒனக்கு ஒடம்பிலே மானம் வெக்கம் இல்லாபோனு எனக்கும் இல்லேன்னு நெனச்சுண்டுட்டையோ? வந்த தடிப் பயல்கள் வீட்டுக்கு வரல்லெ, மித்ரபேதம் பண்ணரவன் வீட்டிலே போய் அட்லங்காப் போட்டிண்டிருக்கான், நான் பூரணகும்பம் வெச்சு அழைக்கிறேன் !

கா :—அப்பரம் ஒங்கபாடு பத்து (என்று சொல்லிக் கொண்டே உள்ளே போகிருள். இரண்டு நிமிஷத்தில் ராம கிருஷ்ணய்யர் கிழக்கேயிருந்து வந்து திண்ணையில் உட்காருகிறுர்.)

நீ :—(உல்லாஸமாக) எப்போய்யா ?

ரா :—இப்பொதான், ஒரு நாழியாச்சு—தெரியாதுபோலே கேக்கிரியே!

நீ :—ஏன், முள்ளிப்பள்ளம் அய்யாவாள் வாராள்னு யாராவது வேட்டுக் கேட்டுப் போட்டாளா என்ன, எங் காதிலே விழல்லியே ?

ரா :—என்னெப்போலே திராபெப் பேர்வழிகளுக்கு வேட்டுக்கீட்டெல்லாம் யார் போடப் போரா?—ஆனு ஒனக்கு அனேக காரியம் காதிலே விழாதில்லேப் போலத்தான் இருக்கு.

நீ :—அதென்னங்காணும், புதுரு போடுறீரே? இருக்கட்டும், சாவகாசமாப் பேசுவோம். சாப்படப் போகலாம், வாரும். (சற்றுத் தயங்கி ஏகதாளமாய்) எங்கே, மைனர்வாள் வந்தாப்பிலே ருக்கே ?

ரா :—அவன் கணக்குப்புள்ளே யாத்துத் திண்ணேலே ஒக்காந்திருக்கான். ராத்திரிச் சாப்படல்லேன்னுட்டான், பசிக்கில்லேயாம்.

நீ :—எது, பசியா வரம்னு ஒம்ம மச்சினன் வாங்கிப்பிட்டான் போலே ருக்கு ! அந்த வரம் நமக்கொத்தரும் கொடுப்பாரைக் காணுமே. இந்த ஒரு சாண் வயத்துக்குத்தானே இத்தனை பாடு. (இருவரும் உள்ளே செல்கிறுர்கள். கூடத்தில் மூன்று இலைகள் போட்டுத் தீர்த்தம் வைத்திருக்கிறது. நீலகண்டையர் ஒரு இலையைச் சுருட்டி அப்புறம் போட்டுக் கொண்டிருக்கும்போது காமாக்ஷி பரிமாற வந்தவள் அதைக்கண்டு தயங்குகிருள்.)

நீ :—பரமாரலாம், ஒலக்கையாட்டமா நிப்பானேன் ? ஒங்க மச்சினன் பசியா வரம் வாங்கிப்புட்டானும்.

ரா :—நீ இங்க மாதிரித்தான் சமயா சமயமில்லாமெ பரியாசமாப் பேசாது, வெனேயா முடியாது. (காமாக்ஷி பேச்சைக் கவனித்துக் கொண்டே பரிமாறுகிருள். இருவரும் சாப்பிடுகிறுர்கள். குழம்பையும் சோற்றையும் கலந்துகொண்டே)

நீ :—இப்பொ என்னங்கணம் 'சார்ஜான் ஷீட்' ஏற்பட்டிருக்கு எம் பேர்லே ?

ரா:—அடெ, அவனும் செறுபுள்ளே. நாலுபேர் நாலு வார்த்தெயெச் சொல்ர போது ரோஸமாயிருக்கு. இங்குஸ்தி அங்குஸ்தி பண்ணர பயல்களுக்கு எளிசாப் போரதோனே!

நீ:—(அழுந்திய அர்த்தமுள்ள வார்த்தைகளை நிதானமாகச் சொல்கிருர்.) பாம்புங் கால் பாம்புக்குத் தெரியும். அங்குஸ்தி இங்குஸ்தி வேலே எனக்குத் தெரிஞ்சான்னு அதிலே கைதேர்ந்தவா பண்ணர தில்லுமில்லே நான் கண்டுபுடிக்கப் போரேன். பொரந்த மேனிக்குப் போரவன் நான்.

ரா: —ஆமாமப்பா, எனக்குத் தெரியாதா? ஆனு எல்லாரும் அப்படிப் போராளா? அதுவும் ஓங்க ஊர்லே வெஷமத்துக்குச் சொல்லவேண்டியதில்லே. கரைச்சாக் கல்லுங்கரையுமோல்லியோ?

நீ:—என்னங்கணும் புதிர்மேலே புதிராப் போடரீரே. யார் கரைச்சா, யார் கரைக்கப்பட்டா? வ்யக்தமாச் சொல்லுமேன்.

ரா:—என்ன இருக்கு சொல்லரத்துக்கு? நீ நாலா பக்கமும் ஏறக்கொறையக் கடன் வாங்கியிருக்கியாம். அப்படி வாங்கரத்துக்கு யாதொரு நியாயமில்லெ, வருஷத்திலே ஆயிரம் ரூபா வரும்படிக்கி மேலே வர்ரபோது. இதிலே ஏதோ சூது இருக்குன்னு அவன் அவன் வாயிலே வந்ததைச் சொன்னு,ரெண்டுங்கட்டாம்புள்ளெ அவனுக்கும் மலேப்பாத்தான் இருக்கு.

நீ:—மலேப்பா? அப்பொ அவனுக்கு குடும்ப யோக க்ஷேமம் எப்படி நடக்கரதுன்னு தெரியாதோ?

ரா:—அடெ, கணக்கு வழக்கெல்லாம் நீதானே பாத்திண்டிருக்கெ. அவன் வயவெளி போரதும், வீட்டு வேலேயைப் பாக்கரதும் 'அங்கே போ, 'இங்கே போ'ன்னுப் போரதும் தவிர வேரே ஒண்ணும் தனக்குத் தெரியாதுங்கரான்.

நீ:—யாரு தெரிஞ்சுக்க வாண்டாம்னு?

ரா:—அப்படியோ? நீதான் அப்பப்போ இதிது இப்படி இப்படியிருக்குன்னு சொல்லணம். சொன்னுத்தானே தெரியும் அவனுக்கு?

நீ:—அதாவது அப்பப்பொ நான் அவனுக்குக் கணக்கு ஒப்பிக்கணம்கிரீர். மாட்டேன்னு?

ரா:—பாத்தியா, இப்பொ நீதானே குதர்க்கமாப் பேசரீரே (என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, சத்தமில்லாமல் வாசற்கதவைத் திறந்துகொண்டு அப்பொழுதுதான் உள்ளே வந்து சின்னத்தாழ்வாரத்தில் உட்கார்ந்த சீதாராமன், இவர்களுக்குத் தூக்கிவாரிப் போடும்படி)

சீ:—என், அத்திம்பேரே, மாட்டேன்னு விட்டுடுமோ? (இந்த வார்த்தை காதில் விழுந்ததும், அவனை ஏற இறங்க ஒரு தரம் பார்த்துவிட்டு, நீலகண்டையர் கையை உதறிவிட்டு, உத்தராபோசனம் வாங்கிக் கையலம்பப்போகிருர். ராமகிருஷ்ணய்யரும் கையலம்புகிருர். மூன்று பேரும் ரேழிக்குப் போகிருர்கள். நீலகண்டையர் இடைக்கட்டுக் கதவைத் தாளிட்டுவிட்டு ரேழித் திண்ணையில் ராமகிருஷ்ணய்யர் பக்கத்தில் உட்கார்ந்து வெற்றிலேப் பெட்டியைத் திறந்து வெற்றிலே பாக்கு எடுக்கிருர். சீதாராமன் வாசல் ஒட்டுத் திண்ணையில் இருவரையும் பார்த்துக்கொண்டு உட்காருகிருன்)

நீ:—என்ன, மாப்பிளே, பிள்ளேயாண்டான் என்னவோ கேட்டானே, விட்டுப் போய்டுமான்னு. இவன் என்ன பண்ணிப் புடுவன்?

ரா:—அதெல்லாம் என்ன பேச்சு! எனக்குப் புடிக்கவேயில்லெ. அவன் 'விட்டுடுமா?' ங்கரான். நீ 'என்ன பண்ணிப்புடுவன்?' இங்கரே. அவன் ஒடனே 'சரி, நான் பாக்கற எடத்திலே பாக்கரேன்' இங்கணும், ஒத்தனெ ஒத்தன் குடுமியெப் புடிச்சுண்டு நிக்கணும்! இதெல்லாம் நமக்கழகோ? ஒத்தருக்கொத்தர் சரிப்படலேன்னுக் காதுங் காதும் வெச்சாப்பிலே போரது.

நீ:—(கோபமாய்) ஸபெயடக்கிக் குசுவிடுரீரே, யாருங்கணும் வாண்டாம்னு?

ரா:—பாத்தியாப்பா, இதுக்குத்தான் அப்பா நான் வரமாட்டேன்னேன்,

அவன் பட்படப்புக்காரன், வாயிலே வந்தத்தெக் கொட்டிப்புடுவன்னு. எனக்கென்ன, ரெண்டுபேரும் ஸமன்தானே. இந்த மாதிரி விஷயங்கள் ஒத்தருக்கொத்தர் பேசிக்கிரதுன்னு ரஸப்படாதுன்னு நடுவுலே சாக்ஷிக்கு ஒத்தன் இருக்கணுமேன்னு ஒன் தங்கை ரொம்ப சொன்னதின்பேர்லே வந்தேன்!

நீ:—ஓகோ, 'கௌன்ஸில்' கூடித்தான் தீர்மானம் பண்ணினாப்பிலே ருக்கு? அவ வேலைக்காரீன்னு எனக்கு ரொம்ப நாளாத் தெரியுமே. தம்பி சொத்தை அண்ணா அநியாயமாக் கட்டிண்டுடாரான்னு ராப் பகலா தூக்கம் வல்லெலப்போலேருக்கு!

ரா:—(கோபம்போல் நடித்து) அனுவசியமா சம்பந்தமில்லாதவா பேரிலெல்லாம் பழி சொமத்தராதாயிருந்தா நான் ஒன் வியவஹாரத்துக்கே வரல்லெ அப்பா, நான் போரேன். அண்ணனாச்சு தம்பியாச்சு, ஒங்கபாடுபத்து.

நீ:—அண்ணனுமாச்சு தம்பியுமாச்சு. அண்ணங்கிண்ணங்கிர மரியாதையெல்லாமிருந்தா இவ்வளவு தூரம் வருமா?

சீ:—அவாவா பண்ணாரது தெரியாது. பொரத்தயார் பேர்லேதான் சொல்லலாம்.

நீ:—(கோபமாய்) டே, ஒன்னிண்டே நான் பேசரபோதுபேசலாம். (ராமகிருஷ்ணய்யரைப் பார்த்து) இப்போ என்னய்யா பண்ணனும்?

ரா:—என்னெக் கேக்கிரியே! ஒனக்குத் தெரியாததா? ஏதாவது ஒரு வ்யவஸ்தை பண்ணிப்பிட வேண்டியது தான்.

நீ:—இவ்வளவுதானே, இப்போ பண்ணிப்பிடுவோம். நெலத்தைச் சரிபாதி, கடனைச் சரிபாதி பிரிக்க வேண்டியது தானே. வேறென்ன, இங்கே நகை நட்டுப் பாழைபோரதா? ஏதோ பெரியவா காலத்து ஓட்டெ ஓடெசல் ரெண்டு கடக்காக்கும். வேண்டியதை எடுத்துண்டு போகட்டும்.

ரா:—அது சரிதான், என்ன ப்ரமாத காரியம். ஆமாம், கடன்னியே? எவ்வளவு இருக்கும்? கொடுக்கும் வகையைத் தவிர, வரவேண்டியது ஏதாவதிருக்குமோ?

நீ:—வர வேண்டியது ஏது? நான் ஏன் (சிரித்துக்கொண்டு) ஓம்மாட்டமா சாருகாரா? பண்ணையாள் சொமந்தை நூறு அம்பது — கடுதாசிலே—இருக்கும். வேறெ ஏது? குடுக்க வேண்டியது ஒம்ம கோட்டு ஒண்ணு, அய்யாத்தொரையனிண்டே மூணும் வருஷம் மேலக் கொல்லெ வாங்கரத்துக்காக ஆயிர ரூபா வாங்கினேன். அதுக்கு வட்டியே குடுபடல்லெ.

சீ:—நான் அப்பொவே சொன்னேன், அந்தக் கொல்லெ நமக்கு வாண்டாம், வட்டிக்கிக் கட்டாதுன்னு.

நீ:—இவன் மகா பிராக்ஞியன், இவன் பேச்செக் கேட்டுத்தான் நான் குடித்தனம் நடத்தணும்போலேருக்கு! வட்டிக் கணக்குப் பாக்கரத்துக்கு நாமும் என்ன வாத்திமனா? இருநூறு புள்ளெ தென்னம்புள்ளெ யிருக்கு அந்தக் கொல்லேலே, இன்னும் நாலு வருஷம் போனா வருஷத்துக்கு நூறு ரூபா வரும்படி இருக்கு. இப்பொ அதைப்பத்தி என்ன வந்துது? அந்தக் கொல்லையையும் அய்யாத்தொரையர் கடனையும் நான் வெச்சிண்டுட்டுப் போரேன்.

சீ:—அது சரிப்படுமோ? கூடவோ கொறையவோ, இருக்கரது பெரிய புஞ்சை ஒண்ணுதான், அதிலே வீதமில்லாபோனா நான் என்ன பண்ணரது? இந்த எழவெடுத்த வூர்லே அடுப்பெரிக்க ரெண்டு அடிமட்டை வேணும்னாக் கடைக்கரதா?

நீ:—எங்கணும், சித்தெ முன்னெ அந்தக் கொல்லெயெ வாங்கினது சும்பத்தனம், அதுனாலே குடிமொழிகிப் போய்ட்டுதாக்கும்னானே.

ரா:—அவன் கடக்கான்னா—அப்பரம், வேறெ கொடுக்கவேண்டியது என்னவோ?

ரா :—கோம்பூர் கோபாலய்யங்காருக்கு ரூ 750, இந்தப் பயல் பூணூலுக்காக வாங்கினது.

ரா :—அது நான் ஒத்துக்கச் சரிப்படாது.

நீ :— (ரொம்ப நிதானமாக) நான் ஒத்துக்கணும்னு கேட்டான்னு, சரிப்படும் சரிப்படாதுன்னு சொல்லணும்? அதெ ஒத்துக்கிண்டு அநியாயமா குடி மொழுகிப் போகவாண்டாம்! —சரி, அப்பா காரியத்துக்கு ரூ 500 ஆச்சு, மேலாத்து ஸாம்பமூர்த்திண்டெ வாங்கித்து, அதென்ன ஒப்புக்கொள்ளராணு, அதுவும் நான்தான் வெச்சுக்கணுமா ?

ரா :—நீ சொல்றது வேடிக்கையாயிருக்கே! அப்பா அம்மா கிருத்தியச் செலவு எல்லாரையுந்தான் கட்டுப்படுத்தும். அப்பொ, அவ்வளவுதானே, பின்னெ ஒரு கடுதாசிலே நெலங்களெ ரெண்டு ஜாப்தாவாக் குறியேன்.

நீ :—குறிப்போம். அதுக்கு மின்னாடி ஒரு சந்தேகம் தீத்துக்கணும். வருஷத்திலே ஆறுசிராத்தம் எங்கழுத்திலே கட்டியிருக்கே, அதுக்காக எனக்கு ஏதானும் வாண்டாமா ?

ரா :—ஏதாவது 'ஜேஷ்ட பாகம்' வைக்க வேண்டியதுதான்.

சீ :—என்னத்தை வைக்கரது? நானுந்தான் ரெண்டுசிராத்தம் பண்ணவேண்டியிருக்கு ('ஏன், அதெத்தான் பண்ணுவானே, விட்டுத் தொலெச்சுப்பிடாதுதானே, பணம் மிச்சம்!' என்று தனக்குள் சொல்லிக்கொள்ளுபவர்போல் தம்பி காதில் விழ நீலகண்டய்யர் சொல்லுகிறார். அவன் அது காதில் படாததுபோல்) வேணுமானு கோவிலடித் திடலெ வெச்சுக்கட்டும்.

நீ :—(இடிஇடி என்று சிரித்துக்கொண்டு) பேஷ் பேஷ், அயனான ஜேஷ்ட பாகம்! அந்தத் தெடல்லே திருகு கள்ளிகூட மொளெக்கரதில்லெ. அது எனக்கு வாண்டாம். இப்பேர்ப்பட்ட புள்ளெகளெப் பெத்த தாயார் தோப்பனார் கரையேராது கஷ்டந்தான், ஆகையாலே அதைக் கோவிலுக்கு எழுதிவைக்கட்டும் (என்று சொல்லி மறுபடியும் தாங்காமல் சிரிக்கிறார்.)

ரா :—(சேர்ந்து சிரித்துக்கொண்டு) அது போகட்டும். வீடு என்ன செய்தி?

நீ :—(சிரிப்பு மாறி மிடுக்காய்) வீட்டைப் பத்தி என்ன வந்துது இப்பொ ?

ரா :—ஏண்டா, வீட்டைப்பத்தி என்னன்னு ? பாகம்னு ஏற்பட்டா எல்லா சொத்தையும் பத்தி பரிவிதானம் பண்ணணுமோல்லியோ ?

நீ :—வீட்டிலேதான் நான் இருக்கேனே.

ரா :—அவனுந்தான் இருக்கான். வெவ்வேவேரையாப் போரதுன்னு ஏற்பட்டுட்டா ரெண்டு பேருமா இருக்க முடியுமோ ? பெரிய வீடுதான்.

சீ :—ஏன், வேணும்னு குறுக்குச் செவரு போட்டுட்டாப் போரது.

நீ :—(தம்பியைப் புதுக் கண்களுடன் பார்ப்பவர்போல்) குறுக்குச் செவரா ? இருநூறு வருஷமா வாழ்ந்துவந்த வீட்டிலே இதுவரையிலும் குறுக்குச் செவரு போடாமே, இப்பொ ஆரம்பிக்கணமோ ? புள்ளெ என்னாது ஒன்னுதான்னு சக்களத்தி சண்டைலே, புள்ளையை ரெண்டா வெட்டிக் கலெக்கிப் பாதியா எடுத்துண்டிடரதுன்னாளாமே, அதுமாதிரின்னா யிருக்கு!

சீ :—(கோபமாய்) பாருங்கோளேன்; அத்திம்பேரே, இப்படிக் கோணமானுன்னு வாயிலெ வந்தத்தைச் சொல்லலாம். நான் பதில் சொன்னாப் பொல்லாதவன்! வீடும் புள்ளெயும் சரியாப் போயிடுமோ ?

நீ ,—அட மடையா, அதுதான் ஒனக்குத் தெரிஞ்ச லக்ஷணம்.

சீ :—அப்படித்தான் இருக்கட்டுமே, இப்பொ என்ன மோசமாப் போச்சு? இருநூறு வருஷமா செவரு போடல்லேன்னு, இருநூறு வருஷமா ஒரு தோப்பனுக்கு ஒரு புள்ளேனு வந்திருக்கும். (கொஞ்சம் மெதுவான குரலில், ஆத்திரம் ததும்ப) ஒங்கப்பாம்மா ரெண்டு புள்ளெயெப் பெறுவானேன்?

இல்லெ, பொறந்துட்டாத்தான் என்ன? ரெண்டாவது புள்ளெயெ அப்பொவே கணத்திலே போட்டிருந்தால் கொல் லேயே இல்லெ! இப்போ எல்லாம் ராஜ போகமா ஆளலாம்.

நீ :—(கோபம் தாங்காமல் தம்பியை அறைந்து விடுபவர் போல் பாய்ந்து) படவா, பெரியவா பேரெல்லாம் புடிச்சு இழுக்கரையா? நீ செத்துப்போகனும், நான் ஏகபோகங் கொண்டாடனும்னு தான், அம்மா அறையிலே விட்டுட்டுப் போன கொழந்தையை எடுத்து ஆரி ரம் பாடிபட்டு வளத்தேனே? வியாதி யும் வெக்கையும் இன்னிக்கோ அன்னிக் கோனு கடந்தபோதெல்லாம் ஒத்தரும் எட்டிப் பாக்கல்லேயே, இப்போன்னு பெரிய மனுஷனைப் போயிட்டே, அண்ணு சொத்தெக் கட்டிக்காமெக் காபந்து பண்ணரத்துக்கு அங்குள்ள சேனேயெல்லாம் வந்துட்டுது!

ரா :—படபடக்காதே, நீலகண்டா! இப்பொ யார் என்ன பண்ணிப்புட்டா? நீயும் எதாவது ஒரு விதாயம் பண்ணிப் புடுவோம்னு சொன்னதின் பேரிலே தானே நான் இதிலே தலேயிட்டுண் டேன். இப்பொ தோணரது அது ஒடம்புக் கொழுப்புன்னு.

நீ :—(அலக்ஷியமும் கோடும் தொனிக்க) அட, ஒம்மெ யாருங்கனும் என்னங்க ணும் சொல்லிப்புட்டா? நீர் அதுக் குள்ளெ பொத்துக்குண்டு கிளம்பிரே! இந்தப் பய நாக்கிலே நரம்பில்லாமே இவன் ஜமீனெ நான் ஆளனும்னு நெனச்சுண்டிருக்கேன்னு கேட்டானே, அதுன்னு எனக்குத் தாங்கல்லெ.

சீ :—(அழுதுகொண்டே) நான் சொன் னதுதான் குத்தமாப்படும். கூடப் பொறந்தவனுக்கு வீடு கடையாதுங்கர கக்ஷி ரொம்ப ஒழுங்கான கக்ஷி போலே ருக்கு.

நீ :—யார்ரா வீடு கடையாதுன்னு? நீயே வெச்சுக்கோ வீட்டை, அதுலெ கெடந்து பொரளு, நான் வாண்டாங் கல்லெ, குறுக்குச் செவரு போடர துன்னு யுக்தி சொன்னேயே அதுக் குன்னு சொல்லவந்தேன். (வெறுப்புடன்) மகராஜனு நீயே வெச்சுக்கோ. குடி யிருக்கிறத்துக்கு எடமா இல்லே இந்த ஊர்லெ, அதாம் பாதி வீடு பூட்டிக் கடக்கே. நான் போரேன் எங்கே யாவது.

ரா :—(பரிந்து பேசும் குரலில்) அது ஸரியில்லே. பெரியவா காலத்து வீடு நீதான் வெச்சுக்க வேண்டியது. மேலும் ஒனக்கு நாலு கொழந்தை குட்டியாச்சு, நாளைக்கிக் கலியாணங் கார்த்தி பண்ண னும். அவனுக்கு இப்பொ ஸத்தியா இஞ்சணக்கம் பிஞ்சணக்கம் இல்லெ. அதுக்கென்ன, அக்ரகாரத்திலேதான் ரெண்டுமூனு மனக்கட்டு இருக் கோனே, அதுலெ ஒண்ணுலே ஒரு வீடு கட்டிக்கிறான். இப்போ ஒண்ணும் அவஸரமில்லே.

சீ :—குசாலாச் செப்பாது. நான் சொல்லல்லே எனக்குத்தான் வீடு வேணும்னு. வீட்டுக்குப் பதிலா எனக் குப் பணமாக் குடுத்துட்டா, நான் ஏதா வது பண்ணிக்கிறேன்.

நீ :—(மனதில் கவலை நீங்கியும் மறுபடி சந்தேகம் ஏற்பட்டதுபோல்) நான் எங்கே போரது பணத்துக்கு?

சீ :—கொல்லெ வாங்கரதுக்கு வாங் கின கடன்லெ என்வீதம் ஐநூறு ரூபா சொச்சத்துக்கும் வீட்டிலெ உள்ள வீதத்துக்கும் சரியாப் போகட்டும். எனக்கு வீடும் வாண்டாம், அந்தக் கட னும் வாண்டாம்.

நீ:—சரி, அப்பொ பாக்கிக் கடன் களுக்கு எப்படி ஏற்பாடு?

சீ :—பாக்கி என்ன கடன்? அப்பா காரியத்துக்காக வாங்கினத்திலே, அத் திம்பேரே, நான் 250 ரூபா கொடுக்கும் படியா ஆகரதோனே? அதுக்கு என் கலியாணத்திலே வாங்கின எதிர் ஜாமீ னிலே செலவெல்லாம் போக 300 ரூபாய்க்கிமேலே குடும்பத்திலே விழுந் திருக்கு. கூட இருக்குமோ கொறைய இருக்குமோ, அதுக்கது சரியாப் போகட்டும்.

நீ:—ஊஹும், அதுவேறெ கணக்கிருக்கா ? சூத்தமில்லே, மாப்பிள்ளே, பையன் பொழச்சுக்குவன்! எவ்வளவு குறிப்பா கவனிச்சிருக்காம்பாத்தீரா ? எனக்குக் கலியாணம் பண்ணரபோது ஆயிர ரூபா வந்தது—ஆனா அதெல்லாம் யாரு கேக்கரா இப்போ, த்ரேதா யுகத்துச் சேதின்னா!

சீ:—ஆமாம், இருவத்தஞ்சு வருஷத்துக் கணக்குப் பாக்கமுடியுமா? அப்பொ இத்தன்னாளா நடந்திருக்கிற குடும்பச் செலவெல்லாம் யார் ஒத்துக்கரது ?

நீ:—(மனம் நொந்தவராய்) அப்பா, நீ பழங்கணக்கும் பாக்கவாண்டாம், புதுக் கணக்கும் பாக்கவாண்டாம், கடனிலே ஒனக்கு எது ஒப்புக்கொள்ளலாம்னு தோணரதோ அதெ ஒப்புக்கொள்ளு—இதுக்கெல்லாம்தான் இப்படிச் சொல்லிப்பிட்டே. இதோ மாப்பிள்ளே நோட்டு ஒண்ணு இருக்கே, அதுக்கென்ன பண்ணரது ? இல்லே, அதையும் நான் கொடுக்கவேண்டியதுதானா ?

சீ:—ஒத்தரும் ஒண்ணும் நஷ்டப்பட்டுட வாண்டாம்—(என்று மேலே சொல்லுவதற்குள், ராமகிருஷ்ணய்யர் குறுக்கே புகுந்து)

ரா:—சீதாராமா, நீ பேசாமெ இரு, அனுவசியமா வார்த்தெ வளர்ரது. என் நோட்டைப்பத்தி அப்பரம் ஆகட்டும். இப்பொ பாக்கி விஷயமெல்லாம் ஒரு தினுஸா தீந்து போச்சு. நெலங்களெப் பிரிக்கவேண்டியது ஒண்ணுதானே. கணக்குப்புள்ளே யாத்திலே ஒக்காந்திருந்தபோது சீதாராமனே வெருமனே இருக்கறபோது ஸம்பர்வாரிப் பிரகாரம் நெலங்களெ ரெண்டு ஜாப்தாவாப் போடச் சொன்னேன், சுமாராப் பாத்து. இதெப் பாரு (என்று சீதாராமன் கையில் இருந்த மடித்த கடிதம் ஒன்றை வாங்கி நீலகண்டய்யரிடம் நீட்டுகிறார். அவர் அதை வாங்கி விளக்கண்டை நகர்ந்து உட்கார்ந்து மௌனமாய்ப் படித்துவிட்டு, கடிதத்தைத் திருப்பி ராமகிருஷ்ணய்யரிடம் கொடுத்து)

நீ:—பாத்தாச்சு.

ரா:—தாரதம் எப்படி ?

நீ:—தாரதம் எப்படீன்னு என்னெக் கேக்கிறீரே, ஒமக்கு இந்த ஊர் அனுபோகம் இல்லாதது போலே! பள்ளக்கால் ப்ரோஷ்டமெல்லாம் ஒரு கையிலேயும் நல்வா மெயல்லாம் ஒரு கையிலேயும் போட்டிருக்கே, ஒமக்குத் தெரியல்லியா ?

ரா:—தெரியாமெ இல்லே. ஆனா நெலம் முன்னூரு குழி ஒண்ணுக்கொண்ணு வித்தியாஸம் இருக்கு, கவனிச்சயா ?

நீ:—ஓகோ, கழுதெ விஷ்டையானாலும் கை நிறைய இருக்குங்கிறீரோ !

ரா:—முழுக்கக் கேக்காமெ அவஸரப்படரயே. ஒரு கைலே நெலம்கூட வெச்சிருக்கரத்தோடெ, அதை எடுத்துக்கரவாளுக்கு என் நோட்டுப் பொறுப்பு இல்லே. அப்பொ ஸரிதானே ?

நீ:—அட, அந்த 200 ரூபாக் காசும், முன்னூரு குழிப் பொட்டநெலமும் வெச்சுட்டா, பாக்கிக்கி ஈடுகட்டிடுமா ? அப்படியானா அவன் வெச்சுக்கட்டும் அந்த வீதத்தை.

ரா:—ஒனக்கு எற்கனவே கடன் அதிகமாகரது, இந்த நானூறு ரூபா மேலெ சேந்தா எல்லாமாச் சொமந்துன்னு போயிடும் ? அதுனாலே இந்த வீதத்தெ நீ வெச்சுக்கரது தேவலேனு எனக்குத் தோணரது.

நீ:—கடனென்னங்கணம் பிரமாதக் கடன் ? கரும்புக் கட்டலே பத்துமா நெலத்தெ வித்துக் குடுத்தேன்னா ஆச்சு. வேண்டாம் வேண்டாம், ஜாஸ்தி நெலம் ஒரு பைஸாக் கடனில்லாமெ அவனே வெச்சுக்கட்டும்.

சீ:—(தீர்மானமாய்) அது சரிப்படாது. அத்திம்பேர் சொன்னபடி செஞ்சாச் செய்யட்டும், இல்லாபோனா வயவயலாப் புரிச்சுப் போட்டுடட்டும்.

நீ:—அப்படியா ? அப்பொ ஸரி, மாப்பிள்ளே, ஒங்க ஜாப்தாப்படியேக் கணக்குப்புள்ளெயெக் கொண்டு ஒரு நகல் இழுதிப்படச் சொல்லும். பொட்ட நெலத்தை வெச்சுண்டு எங்குடி முழுகிப் போரதுன்னுப் போகட்டும், அவனுவது

# அமிர்தாஞ்சன் லிமிடெட்

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க




ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

**அமிர்தாஞ்சன் லிமிடெட்**

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்



தன் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிறோம். **ஆனால் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனால் அவருக்கு ஏதாவது கெடுதல்நேர்ந்தால், அவருடைய குடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது ?

**"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ்"** தான்

அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால் —

**நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,**

7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

| ஸப் ஆபீஸ் : | மதராஸ் பிராஞ்சு : | ஸப் ஆபீஸ் : |
|---|---|---|
| 171, புதுத் தெரு, | 362, சைனாபஜார் ரோடு, | 5, செம்பகோட ரோடு, |
| மதுரை. | எஸ்ப்ளனேட், மதராஸ். | பெங்களூர். |

நன்னுயிருக்கட்டும். இம்மெ வயல் வயலாப் பிரிச்சுண்டு, இன்னிக்கினில்லே, என்னிக்கும் தாயாதிக்காச்சக் கொண்டாடிண்டு ஊர் சிரிக்க வாண்டாம்.—எனக்குத் தூக்கம் வரது, நான் படுத்துக்கப்போரேன் (என்று சொல்லி, ரேழி தண்டியத்திலிருக்கும் பாயை எடுத்துக் கொண்டு திண்ணைக்குப் போகிறார். மற்ற இருவரும் விளக்கை நிறுத்திவிட்டு, இடைக்கட்டுக் கதவுக்குத் தாழ்ப்பாளைத் திறந்து, 'வாசக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கணும்' என்று சொல்லிவிட்டு வெளியே போய்க் கிழக்கே கணக்குப்பிள்ளை வீட்டை நோக்கிச் செல்லுகிறார்கள். காமாக்ஷி தாழ்ப்பாள் போடவந்தவள் திண்ணையில் நீலகண்டய்யர் மட்டிலும் படுத்திருப்பதைக் கண்டு)

கா :—என்ன, பேச்சு ரொம்ப மோம்மரமா நடந்துதே ?

நீ :—எல்லாம் எதிர்பார்த்த பேச்சுத்தான். அவாளுக்குள்ளே முடிவு கட்டி, 'ஒஸ்தி' மொதக்கொண்டு வெச்சுண்டுதான் வந்திருக்கான்கள். நம்பளுக்கு ரூ 2000 சொச்சம் கடனும் வீடும் தெக்கு வெளிலே நாப்பது மா நெலமும், அவனுக்கு ரூ 400 கடனும் (முள்ளிப்பள்ளத்தான் கோட்டு) மேற்கே முப்பத்தேழு மா நெலமும்.

கா :—இதென்ன வேடிக்கையாயிருக்கே நீங்க சொல்ரது ! வீடு நம்ப வெச்சுக்கரது சரிதான். அதுக்காகக் கடன் முழுக்க நம்ம தலேலே கட்டரதா? என்ன பாகம் நீங்க பண்ணிண்டு வாழரது ?

நீ :—என்ன பாகமா ? எல்லாம், தயிரும் பாலும் வெண்ணையுமா வெச்சு அடைச்சு வளத்தையே, ஒன் அருமை மச்சினன், எல்லாம் அவன் 'ப்ளான்' தான். சுப்புணி பூணச் செலவு ஒத்துக்க முடியாதுன்னுட்டான். அவனுக்கு எதிர் ஜாமீன்—தூக்கமாட்டாத மூட்டை வாங்கிண்டு வந்தாரே அப்பா, முழுசா 750 ரூபா—அதிலே 250 ரூபா குடும்பத்திலே விழுந்திருக்கு, அதை ஒதுக்கணும்னுன். வீட்டுக்காக, ரூ 500 நம்பளுக்கு அதிகப்படிக் கடன், ஒங்க நாத்தனார் ஆம்டையான் கடன் முழுக்க அவனை வெச்சுக்கரதுக்காகப் பொட்டல்லே நம்பளுக்கு 3 மா நெலம்கூட.

கா :—பொட்டல்லே மூணு மா நெலமென்ன, எல்லாம் பொட்டலாத்தானே யிருக்கும்போலேருக்கு நீங்க சொல்ரத்தைப் பாத்தா, தெக்கு வெளிப் பள்ளக்காலாட்டமான்னு யிருக்கு.

நீ :—(எரிச்சலாய்) பொட்டல்தான், என்ன பண்ணரது அதுக்காக ? இல்லாபோனு, வயல் வயலாப் புரிச்சுப்போடணும்னுன், ஒயாமெ தாயாதிக்காச்சல் கொண்டாடரத்துக்கு. கடன் கண்ணியெல்லாம் அவன் சொன்னபடிப் போகாபோனு விவஹாரத்திலே வந்து நிக்கும் போலே யிருந்துது.

கா :—(சற்றுப் படபடப்பாய்) அதுக்காக, உள்ளதெல்லாத்தெ விட்டுக்குடுத்துடரதா ? ஏன், எங்கலியாணத்தும்போது எங்கப்பா ஆயிர ரூபா கொட்டிக்கொடுத்தாரே, அதிலே ரூ 200 கூடச் செலவழியல்லேயே, பாக்கி யெல்லாம் குடும்பத்திலேதானே விழுந்துது, அது ஒண்ணும் கணக்கிலே சேத்தியில்லேயா ?

நீ :—எனக்குத் தெரியாத்துக்கு நீ புத்திசொல்லிக் குடுக்க வந்துட்டயோ ? கோணக்காக்ஷி பேசரவாளிண்டே எதெச் சொல்லித்தான் என்னப் பிரயோஜனம்? அதெல்லாம் சொல்லாமெ இருப்பேன்னு நெனைக்கிரயோ ?

கா :—சொன்ன அழகுதான் தெரியரதே ! இப்படி பாகம் பண்ணுபோனு இப்பொ என்ன மோசமாப் போச்சு, பேசாமெ யிருக்கரதுதானே ?

நீ :—சரி, அப்பொ ஒத்தரை ஒத்தர் குடுமியெப் புடிச்சுண்டு நிக்கவேண்டியதுதான், ஊர்லெ யிருக்கரவன் கை கொட்டுவன். நம்ம செலவுலே காப்பி சாப்பிடரத்துக்கு ரொம்பப் பேர் தயாரா யிருப்பா.

கா :—சரி, எந்த எழவு எப்படியானு நான் என்ன பண்ணப்போரேன் ? எம் பேச்செக் கேட்டு என்ன நடக்கரது இங்கே. நானும் பட்டம்மாளா ?

நீ :—ஏன்,என்ன கிரீடம் வெச்சிருக்கு அவளுக்கு ?

**கா:**—கிரீடந்தான். இல்லாமேபோனா வந்ததும் வராததுமா, ஒரு பொம்மனாட்டி, ஏணியெ வெச்சுண்டு மாக்கு மாக்குன்னு ஓசரப் பரண்மேலே இருந்து எந்தக் காலத்திலே போட்ட பாத்தரங்களோ காது போனதும், ஒருமொழப் பாசி படிஞ்சதுமா, கண்டானும் முண்டானும் ஒண்ணு பாக்கியில்லாமே ஏறக்கி வெச்சுட்டாளே, பாகம் பண்ணரத்துக்கு! இந்த ஆஸ்தியாரோ அடிச்சுண்டு போயிடப் போரர்ப்பிலே நெனச்சுண்டுன்னா பாக்கப்போன ஆம்படையாங்காரனோடே கௌம்பி வந்திருக்கா.

நீ:—எடுத்து வைக்கட்டுமே, அவ்வளவுக் கவ்வளவு வேலை மிச்சம். சரி, ஒரு வார்த்தை இப்பொவே சொல்லி வைக்கரேன். இந்தப் பழம் பாத்திரங்களிலே ரெண்டுகூட இருக்கட்டும் ரெண்டு கொறைச்சிருக்கட்டும், அதனாலே குடி முழுகிப் போகாது. இவ்வளவு விட்டுக் குடுத்த நாம்ப வேணுமானா அந்தப் பாத்திரம் எல்லாத்தையும் அந்தக் கழுகெ எடுத்துண்டு போகட்டும்னு இருந்துடலாம்.

**கா:**—நன்னாச் சொன்னேளே! பெரியவா காலத்துப் பாத்தரம், அவாளுக்கிருக்கர பாக்கியம் நமக்கில்லியா? ஆயிரங்காலம் ஆவி வந்த சாமான்களை சீதேவியெக் காலால் உதைக்கராப்பிலே 'நேக்கு வாண்டாம்'னு சொல்ரது?

நீ:—ஒண்ணெ வாண்டாம்னு தியாஜ்யம் பண்ணிப்பிடச் சொல்லலை. ஒரு கரண்டி முட்டைக்கும் பொத்தச் சொம்புக்கும் யுத்தம் பண்ணிண்டு நிக்காதேன்னுதான் சொல்ல வந்தேன்.

**கா:**—ஒங்க காரியத்தை நீங்க பாருங்கோ, எங்காரியத்தை நான் பாக்கரேன். நாழி பதினஞ்சு ஆகப்போரது, அந்தக் கழிச்சல்லே போரவன் நாகப்பன் இன்னம் வண்டியெ ஓட்டிண்டு வரக்காணுமே. கொழந்தெ மத்தியானம் பத்து நாழிக்கிச் சாப்பிட்டது.

நீ:—ஏதோ, திருநாள்னா கொழந்தைகளுக்கு லேசுலே விட்டுட்டுவா மனசாகுமா? சுப்புணிதான் 'இன்னி ராத்திரி வாணவேடிக்கை பாத்துட்டுப் போகலாம்'னிருப்பன். கந்தமங்கலம் திருநாள்ளெ எப்போதும் வாணவேடிக்கெ ரொம்ப விமரிசையோல்லியோ? சாப்பாட்டுக்கென்ன, சாதமா சாப்பட்டாத்தானா? ஏதாவது வாழப்பழம், பட்டாணிக் கடலை, முறுக்கு மண்ணாங்கட்டி வாங்கித் தின்னிருப்பன். தானே வரது கழுதைகள். தூக்கம் வரது எனக்கு (என்று சொல்லிப் படுத்துக் கொள்கிறார். வாசற் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே போகிறாள் காமாக்ஷி.) [திரை]

(தொடரும்)



**கன்னடக் கதை**

# காட்டு மல்லிகை

மூல எழுத்தாளர் :—ஸி. கே. நாகராஜ ராவ்

மொழிபெயர்ப்பாளர் :—ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு மணி சமயத்தில் புலையனொருவன், "ஏனபேடவி நின்ன பளிகெ பந்து" (என்ன வேண்டட்டும், உன் சமீபம் வந்து) என்னும் புரந்தரதாஸரின் கீர்த்தனத்தை மெல்லிய குரலில் பாடியவாறு பெங்களூர்க் கண்ணாஸ்பத்திரியிலிருந்து பசவன்குடிப் பக்கம் வரும் ரஸ்தாவிலே நிதானமாக வந்துகொண்டிருந்தான். அவன் 'சங்கரய்யா ஹாலி'ன் அருகே வந்ததுமே, ஹாலில் பாடிக் கொண்டிருந்த புகழ்பெற்ற கிருஷ்ண பாகவதரின் தோடி ராக ஆலாபனையைச் செவியுற்றான். செவியுற்றதும் ரஸ்தாவிலேயே சற்று நேரம் நின்றான். அவன் வெகுதூரத்தில் இருந்ததினால் ஆலாபனை அஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தது.

பெங்களூரின் 'தியசாபிகல் சொஸைடி'யினருகில் இருக்கும் சங்கீத மந்திரத்தின் பெயர்தான், பிரசித்தி பெற்ற சங்கீதக் கச்சேரிகள் நடைபெறும் சங்கரய்யா ஹால். அது ஒரு விஸ்தாரமான பவனம். பல ஜன்னல்கள் கொண்டது. சுற்றிலும் மாமரங்கள். புண்ணியவான்கள் பணம் கொடுத்து உட்புறம் சுகாசனத்தில் அமர்ந்து சங்கீதம் கேட்டுக் கொண்டிருந்தால், சங்கீத கலாதேவியின் உபாசகர்களான நிர்க்கதிகள் மாமரங்களின் மறைவில் நின்றுகொண்டு, சங்கீதம் பருகிக் கொண்டிருந்தார்கள். நடுநடுவில் போலீஸ்காரர்களைப் பார்த்தவுடனேயே மாமரங்களின் அருகில் நின்றிருந்தவர்கள்,—பாவம்!—முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு போவார்கள்.

அந்தப் புலையன் முதலில் தொலைவில் நின்றிருந்தான். பாகவதரின் சங்கீதம் அவன் உள்ளத்தை நர்த்தனம் செய்யும்படி தூண்டியது. அவனுக்கு இகலோகத்தின் பிரக்ஞையே இல்லை. அவனுடல் இருந்தாற்போல் பாகவதர் பாடிக்கொண்டிருந்த ஜன்னலைச் சமீபித்தது. அவ்விடத்தில் நின்று அவன் பூர்ண மனத்தினாய்ச் சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஆலாபனை இன்னும் நடந்துகொண்டிருந்தது. புலையன் அப்படியே ஸ்தம்பித்துப்போய் ஜன்னலின் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றான். அந்தச் சங்கீதத்தின் ஜோரில் அவனுக்கு நினைவு தவறிவிட்டது. கண்ணில் ஆனந்த பாஷ்பம் வர ஆரம்பித்தது. பாகவதர் பாடிக்கொண்டே ஒருதடவை அவனைப் பார்த்தார். தலையை ஆட்டிக்கொண்டிருக்கும் அவனைக் கண்டு அவருக்கு ஆனந்தமேற்பட்டது. அவர் மறுபடியும் ஆலாபனையில் லயித்துப் போனார்.

சபையோர்கள் அனைவரும் அவருடைய சங்கீதத்தை மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர். புலையனும் அந்தச் சங்கீதத்தின் மாதுர்யமான அமுதத்தைச் சுயேச்சையாகப் பானம் செய்வதில் மெய்ம்மறந்து போனான். அந்த மதுரமான சங்கீதத்தின் இன்பத்தினால் அவன் இதயமானது அபாரமான சந்தோஷ சாகரத்தில் நீந்திக்கொண்டிருந்தது.

அவன்மீது ஒரு (போலீஸ்) பாராக்காரனின் திருஷ்டி விழுந்தது. அவன் புலையனிடத்தில் வந்து, "ஏய்! இங்தண்டை வா" என்றான். அவன் கூவி

யது, சந்தோஷத்தில் திளைத்துக்கொண்டிருந்த அந்தப் புலையனுக்குக் கேட்கவுமில்லை; போலீஸ்காரன் வந்ததை அவன் பார்க்கவுமில்லை.

போலீஸ்காரன் சினங்கொண்டான். அவன், "நல்ல வார்த்தையாகச் சொன்ன பேச்சைக் கேட்க வேண்டும்; இல்லாவிடில் பார்த்துக்கொள்" என்றான்.

மெய்ம்மறந்திருந்த அந்தப் புலையனுக்கு அவன் கூறியது எப்படிக் கேட்கும்? எவ்விதம் சுய உணர்வு உண்டாக்கும்?

போலீஸ்காரன் முன்னிலும் அதிகச் சினங்கொண்டான். புலையனின் தோளைப் பிடித்து, "இப்படி வாடா?" என்று இழுத்தான். புலையன் அசையவில்லை. ஆனால் அவன் கண்களில் மாத்திரம் ஆனந்த பாஷ்பம் சொரிந்தது. இவ்விதம் மூன்று தடவை சொல்லியும் பதில் அளிக்காமல் இருப்பதைப் பார்த்து, போலீஸ்காரனுக்குக் கோபம் இருமடங்கு அதிகரித்தது. புலையனின் இரண்டு தோள்களையும் பிடித்துப் பின்னுக்கிழுத்தான். அதற்கும் அசையவில்லை அந்தப் புலையன் இடத்தைவிட்டு! இதிலிருந்தே புலப்படவில்லையா சங்கீதம் மனிதனின் கவலையைக் கொஞ்ச நேரமாவது தூர அகற்றுமென்பது?

போலீஸ்காரன் கோப மேலீட்டால் "இந்தண்டை வா; இல்லாவிட்டால் இரண்டு விழும்" என்று மிரட்டினான். பாகவதரின் கான வெள்ள இன்பத்தில் நர்த்தனம்செய்துகொண்டிருந்த ஆத்மாவானது அந்த நர்த்தனத்தைக் கணப்பொழுதில் விட்டுவிட எப்படி முடியும்? அவன் போலீஸ்காரனின் இந்த மிரட்டலுக்கும் நகரவில்லை. போலீஸ்காரன் கடுகடுப்புடன் பார்த்தான். சிவப்பேறியிருந்த அவன் முகம் வெளுத்தது. மேலே ஓங்கியிருந்த அவன் கை தானாகவே யதாஸ்தானத்திற்குத் திரும்பிற்று. பாகவதரின் சங்கீதத்தின் மகிமை!

இன்னொரு தடவைச் சொல்லலாமென்று தோன்றிற்று அந்தப் போலீஸ்காரனுக்கு. அவன் புலையனை நெருங்கி, "யாரையா நீ? எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லையா? இப்படிப் பிசாசைப்போல் நின்றிருக்கிறாயே!" என்று நிதானமாகச் சொன்னான். அதற்கும் பதிலில்லை. அப்பொழுது போலீஸ்காரன், "இவன் நல்ல வார்த்தைக்கு அசைவதாகத் தோன்றவில்லை. இரண்டு விட்டு ருசி காண்பித்தால் தன்னைப் போல் வழிக்கு வருவான். நன்றாகக் குடித்துவிட்டு வந்திருக்கிறான் போலிருக்கு!" என்று எண்ணினவனாய், மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, கையை ஓங்கிய வண்ணம் புலையனை மேலிருந்து கீழ்வரைக்கும் பார்த்தான். அப்படியே அவனும் மெய்ம்மறந்தான் என்று தோன்றுகிறது: இல்லை! திரும்பவும் தலையை நிமிர்த்திக்கொண்டு, மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு புலையனின் முதுகின்மீது அடித்தான். அவன் அப்படியே தாவி இருப்பிடத்திற்குப் போய் நின்றான். போலீஸ்காரன், "நல்ல கெட்டிக்காரப் பயல் இவன்!" என்று இன்னொரு அடி அடிப்பதற்கும், ஆலாபனை முடிவதற்கும் சமயம் ஒத்தது. சங்கீதம் நின்றதால் புலையனுக்கு அறிவு ஏற்பட்டது. அவனுக்கு அடி பலமாக விழுந்ததால் வலி தாங்கவில்லை. "ஐயோ! மூளை முறிந்து விட்டதே!" என்று அலறிக்கொண்டு அப்படியே விழுந்து விட்டான்.

"ஐயோ" என்னும் அந்த நாதமானது உள் நுழைந்து சபையோர் அனைவரையும் ஊடுருவிப் பாய்ந்துகொண்டு பாகவதரின் காதில் விழுந்தது. அவர் அந்தப் பக்கம் திரும்பினார். அவருக்கு என்ன தோன்றிற்றோ? கண்ணைத் துடைத்துக்கொண்டு, "அவனை இவ்விடத்திற்கு அழைத்து வாருங்கள்" என்றார்.

அவர்கள் அவருடைய வார்த்தையைக் கௌரவிப்பதற்காக விழுந்து கிடந்தவனைப் புலையன் என்பதையும்

மறந்து உள்ளே அழைத்து வந்தனர். பாகவதர் தாமே அவன் முகத்தில் ஜலம் தெளித்துக் காற்று விசிறி நினைவு வரச் செய்தார். அப்படியே ஒரு தடவை அவனைப் பார்த்தார். பாகவதரின் கண்ணிலிருந்து ஒரு துளி ஜலம் துளித்தது. அதைக் கையாலே துடைத்துக் கொண்டார். சபையோர்கள் பிரமித்துப் போனார்கள். பாகவதர் இப்படியேன் ஆனாரென்பதை அவர்கள் அறியக்கூடவில்லை. ஒருவரை ஒருவர் நோக்க ஆரம்பித்தனர்.

பாகவதர் பிறகு போலீஸ்காரனைப் பார்த்தார். அவன் தலைகுனிந்த வண்ணம் நின்றிருந்தான். மற்றுமொரு முறை அவர் புலையனைப் பார்த்துச் சபையோர்களிடத்தில், "நான் சங்கீதம் கற்றது இன்று ஸார்த்தமாயிற்று. ஒருவனையாவது சம்பூர்ணமாகச் சந்தோஷப்படுத்தினேனே! நீங்களனைவரும் சொல்லுங்கள்—ஆத்ம சாக்ஷியாகச் சொல்லுங்கள் — என் சங்கீதத்தினால் இவனவ்வளவு சந்தோஷித்தவர் எவராவது இருக்கிறீர்களா? போலீஸ்காரன் அடித்தால்கூட இவனுக்கு அறிவுண்டாகவில்லை!" என்று உணர்ச்சியுடன் சொல்லி, நீண்டதொரு பெருமூச்செறிந்தார். அவருடைய பெருமூச்சின் பொருளை எவரும் அறியக்கூடவில்லை. அவ்வளவு பெயர்களில், "நான் மனமாரச் சந்தோஷித்தேன்" என்று தைரியமாகச் சொல்வதற்கு எவருக்கும் நாக்கு எழவில்லை.

இதற்குள்ளாகப் புலையன் சுதாரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன், "துரையே! நான் இங்கிருப்பதற்கு அருகனில்லை. எனக்கு உங்கள் சங்கீதத்தைக் கேட்டு ரொம்பவும் சந்தோஷமாச்சு. இன்னொரு பாட்டை உங்கள் வாய்மூலம் கேட்கவேணுமென்று என் விருப்பம், துரையே! நானோ நாதியற்ற பிச்சைக்காரன். சங்கீதத்தைப் பணம் கொடுத்துக் கேட்கச் சக்தியில்லை. கேட்டுத்தான் ஆகவேணுமென்றால் உதை திங்கவேணும். துரையே! இன்னொரு பாட்டைக் கேட்க வேணுமென்றிருக்கிறது என் மனசில். நான் வெளிப்புறமே நின்றுகொண்டு கேட்கிறேன். இவ்வளவு பெயர்களின் நடுவில்,—நான் பறையன்—இருக்கப்படாது. நான் இதுவரையிலும் இந்தச் சங்கீதத்தைக் கேட்கும்பொழுது எனக்கு நினைவே போயிருந்தது. அவ்வளவு நன்றாகப் பாடுகிறீர் துரையே! இன்னும் ஒன்றே ஒன்று!" என்று அங்கலாய்த்துக் கேட்டுவிட்டு வெளியே செல்லப் புறப்பட்டான்.

அவனுடைய வார்த்தை பாகவதரின் இதயத்தைக் கரைத்துவிட்டது. அவர் இளகிய மனத்தினர். "வேண்டாமப்பா, நீ ரொம்ப கஷ்டப்பட்டிருக்கிறாய். இவ்விடமே உட்கார்ந்து, ஒன்றில்லாவிட்டால் நாலு கேளேன்!" என்று அவன் கையைப் பிடித்து உட்கார வைத்தார். அவன் புலையன் என்னும் எண்ணம் அவருக்கு அப்பொழுது வரவில்லைபோலும்! இல்லாவிடில் அனைவரும் ஒன்றுதான் என்பதுதான் அவருடைய எண்ணமோ? மற்றவர்களெல்லாம் அவன் புலையனென்று அவனுடைய அழுக்கடைந்த கந்தல் துணியையும், அழுக்கடைந்த தேகத்தையும் பார்த்து வெகுவாக அசங்கியப்பட்டார்கள். அவனுடைய உள்ளம் நிர்மலமாகவும் பரிசுத்தமாகவும் இருக்கவில்லையா? ஜனங்களுக்கு வெளிப்புற ஆடம்பரங்கள் வேண்டுமே தவிர உட்புறமுள்ள உள்ளத்தின் பரிசுத்தம் வேண்டியிருப்பதில்லை. ஆனால் கலா (கலைரசிகர்கள்) உபாசகர்கள் பார்ப்பது உள்ளத்தை; உடலை அல்ல! பாகவதரின் பலவந்தத்தின்பேரில் புலையன் தூர நகர்ந்து ஒரு புறமாக உட்கார்ந்தான்.

மறுபடியும் அவருடைய சங்கீதம் ஆரம்பமாயிற்று. பாகவதரின் அபாரமான ஆனந்தத்தினால் அவருடைய சங்கீதம் முன்னிலும் அதிக இனிமையாகவும், மாதுரியத்துடனும் விளங்கிற்று. புலையனின் பரிசுத்தமான ஆத்மா அவனுடைய உடலிலிருந்து பறந்துபோய், பாகவதரின் சங்கீத மாதுரி

யத்துடன்கூட நடனமாடியது. சபையோர் அனைவரும் அவனது உள்ளத்தின் பக்தியைக் கண்டு வியந்தனர்.

பாகவதர் மனத்திற்குள்ளேயே, "அனைவரும் இவ்விதம் சங்கீதத்தைக் கேட்டுச் சந்தோஷப்படுபவர்களானால் .. .........!" என்று எண்ணிக்கொண்டார்.

சங்கீதக் கச்சேரி முடிவடைந்தது. சபையோர் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர். புலையனுக்கு இகலோகத்து ஞாபகம் வந்தது. பாகவதரை நமஸ்கரித்துவிட்டு, "ரொம்பவும் சந்தோஷமாயிற்று என் துரையே! எனக்கு உமக்கொன்றும் கொடுக்கச் சக்தியில்லை. இனி வீட்டுக்குப் போகிறேன்" என்றான். அப்பொழுது பாகவதர் புன்முறுவலுடன் "உன் பெயரென்ன?" என்று கேட்டார்.

"என்னை முனியன் என்று அழைக்கிறார்கள் துரையே!"

"சரி, போய் வா. ஆனால் நான் வந்த பொழுதெல்லாம் சொல்லி அனுப்புகிறேன். நீ வந்துதான் ஆகவேணும்" என்று சொல்லி, பாகவதர் அவன் சென்ற வழியையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தார். அவனும் இவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு நிதானமாகப் புறப்பட்டுச் சென்றான். அவன் கண்மறைவானவுடன் பாகவதர் கண்ணைத் துடைத்துக்கொண்டு, நீண்டதொரு பெருமூச்செறிந்தவராய் அவ்விடமிருந்த ஒரு சேவகனை, "இதை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் அந்த முனியனுக்குக் கொடுத்துவிட்டு வா" என்று ஒரு பணப்பையை அவன் கையில் கொடுத்தார்.

நான்கு வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் பாகவதர் பெங்களூருக்கு வந்தார். அதே புகழ்பெற்ற சங்கரையா ஹாலிலேயே அவருடைய கச்சேரி. என்றைக்கும்போல் இன்றைக்கும் ஜனங்கள் நிறைய நிறைந்திருந்தனர். பாகவதர்


# தையல் மெஷின் ஊசிகள்

வீனஸ் தையல் மெஷின் ஊசிகளும் அதனுடைய பாகங்களும் விற்பதற்காக இந்தியாவில் பலவிடங்களில் ஏஜெண்டுகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை. கடைகளில் விற்கப்படும் மற்ற ஊசிகளைவிட வீனஸ் தையல் ஊசிகள் உரமாகவும், முலாம் பூசியதாகவும், வெகுகாலம் உழைப்பதாகவும் இருக்கும். கமிஷன் வகையறாக்கள் சௌகர்யம்; இவ்வளவுதான் விற்பனை செய்யவேண்டுமென்ற நிபந்தனை எதுவுமில்லை. சாம்பிள் பெட்டிக்கு எழுதவும். ஆங்கிலத்திலேயே கடிதப் போக்குவரத்துக்கள் வைத்துக்கொள்ளவும்.

மானேஜர்:

தி அமெரிக்கன் டிரேடிங் (இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்)
நே. 139, குர்தாஸ்பூர், (பஞ்சாப்)

*Manager:*

**The American Trading Co.** (Engg. Works)
No. 139, Gurdaspur (Punjab)

வந்தார். ஆனால் போனதடவை ஏற்பட்ட களை இந்தத் தடவை சபைக்குத் தோன்றவில்லையென்று பாகவதருக்குப் புலப்பட்டது. காரணமென்ன? ஏதாவதொரு களையை உண்டாக்கும் வஸ்து மாயமாகி இருக்கவேண்டும்! உல்லாசத்துடன் விளங்கும் அவர் முகம் பொலிவிழந்தது. இன்னொரு தடவை தீவிரமாகச் சுற்றிலும் நோக்கினார். அவசியமானது கிடைக்கவில்லையென்று தோன்றுகிறது! அப்படியே மெதுவாக அமர்ந்து தலைகுனிந்தார். மறுபடியும் சற்றுநேரம் கழிந்த பிறகு தலை நிமிர்ந்து, அவ்விடத்துக் காரியதரிசியை அழைத்து, "அவன் ஏன் வரவில்லை?" என்றார். "போன தடவை பிளேகில் அவன் போய்விட்டான் என்று அவன் வீட்டார் சொன்னார்கள்" என்று காரியதரிசி பதிலளித்தார். யோசனையில் ஆழ்ந்திருந்த பாகவதர் "ஆ.........போய்விட்டானா?" என்றார்.

சபையை மறுபடியும் உற்று நோக்கினார். திரும்பவும் மாமரங்களின் பக்கம் அவருடைய திருஷ்டி விழுந்தது! உடனே தலைகுனிந்தார். முகம் விகாரமடைந்தது. அவர் கண்ணில் ஜலம் நிரம்பிப் பார்வையை மறைத்தது. அப்படியே அவர் ஒருதடவை நீண்டதொரு பெருமூச்செறிந்து "மு...னி....யா...!" என்றார். அவ்வளவிலே அவர் குரல் நின்றது. கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் தலை நிமிர்ந்து சபையோர்களை நோக்கி, "இன்றைக்கு எனக்கு...ரொம்ப...களைப்பாக இருக்கு...பாட...முடியாது...தயவு செய்து...மன்னியுங்கள்" என்று தழதழத்த குரலில் சொல்லிவிட்டு எழுந்தார்.

பாகவதர் புறப்பட்டே போய்விட்டார்! அவர் மனத்திற்குள்ளாகவே, "பல இருப்பவர்களுக்குக் கடலை இல்லை! பிரபஞ்சமே இப்படி. காட்டு மல்லிகையை அணியும் புண்ணியம் அந்தத் தேவ தேவனைத் தவிர மனிதர்களுக்கில்லை!" என்று எண்ணியவாறே புறப்பட்டுச் சென்றார்.

# 'களிப்புடன் வாழ்வோம்'

[சூடாமணி]

பல்லவி

கன்றுகள் மேய்த்துக்
காப்பவன் மந்தைக்
கன்றெனத் திரிவோம்;
களிப்புடன் வாழ்வோம்.

சரணம்

குன்றிடைத் தழைவான்;
குளிர்மழை பொழிவான்;
அன்றலர் மலரால்
அழகினை விரிப்பான்;
குன்றுகள் குலுங்கக்
கொடுமழை பொழிந்தால்.
குன்றினை எடுப்பான்,
குடையென விரிப்பான்!

காற்றென வருவான்,
கமழ்பூந் தென்றல்-
காற்றெனும் உயிராய்க்
களிப்புடன் காப்பான்;
காற்றில் சகடக்
காலனும் வந்தால்,
கூற்றினும் கொடிய
கூற்றென உதைப்பான்.

குஞ்சர நடையான்
கோகுலச் செல்வன்
கொஞ்சியே கொடுப்பான்
தீஞ்சுவை அமுதம்;
நஞ்சினை ஊட்ட
வஞ்சனை எழுந்தால்
அஞ்சன வண்ணன்
நஞ்சினைக் குடிப்பான்.

களிப்புடன் கன்று
காலிகள் மேய்ப்பான்;
அளிப்பவன் ஆயன்,
ஒளிப்பவன் அல்லன்;
செழிப்புறப் பொழியும்
செழுமுகில் வண்ணன்
அழிக்கவும் வல்லான்,
அளிப்பதில் நல்லான்.

கன்றுகள் மேய்த்துக்
காப்பவன் மந்தைக்
கன்றெனத் திரிவோம்;
களிப்புடன் வாழ்வோம்.

# இந்தியா பொட்டலாகி வருகிறது!

"நம் கண் முன்பாக இந்தியா வெறும் பொட்டலாய்க் காய்ந்து வருகிறது. எனினும், நம்மில் பலர் இதைக் கண்டும் உணருவதில்லை" என்று கர்னல் எப். எல். பிரெயின் சமீபத்தில் அகில இந்திய ரேடியோ மூலம் செய்த ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

அவர் மேலும் பேசியதன் கருத்தாவது :—

வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப் பிரதேச ஜில்லா முதல்தரமானது என்று ஒரு நண்பர் வருணித்தார். ஆனால் உண்மையில் அந்த ஜில்லா பிரதி வருஷமும் வளம் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. மண்ணரிப்பு ஒருபுறம், மரங்களும் புல்லாங்தரைகளும் படிப்படியாகக்குறைந்துவருவது-இவையேவளக் குறைவின் காரணங்கள். அந்த ஜில்லா வாசிகளில் பாதிப்பேருக்குமேல் தேவைக்குக் குறைவாகவே சாப்பிடுகிறார்கள். இந்தியாவின் ஒரு பாகத்தைச் சுற்றிப் பார்த்த ஒரு யாத்திரிகர்சொன்னார்: "சந்திர மண்டலத்திலுள்ள மலைகளை வருணிக்கிறார்களே, அதைப்போல் தென்படுகிறது இந்தியா!" என்று.

மண்ணரிப்பு என்பது படர்ந்து வரும் மரணம். சில வருஷங்களுக்கு முன்பே இதை உணர்ந்தேன். அதுமுதல் பாஞ்சாலக் காட்டிலாகா நிபுணர்களின் உதவியுடன் இப்பிரச்னையை ஜாக்கிரதையாகப் பரிசிலனை செய்தேன். இந்தியா முழுவதிலும் மண்ணரிப்பு எவ்வளவு விரிவாக நடைபெறுகிறது என்பதையும், மண்ணுடன்கூட, மரம் செடி கொடிகளும் மறைந்து வரும் விதத்தையும் கண்டு திடுக்கிட்டேன். வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி இதே கதைதான். சில இடங்களில் ரம்யமான காடுகளைக் காணலாம். இப்போதைய நிலைமைக்கும், இருந்திருக்கக்கூடிய நிலைமைக்குமுள்ள வித்தியாசத்தையே அவை அறிவுறுத்துகின்றன.

கடவுள் வெறும்காடுகளைச் சிருஷ்டிக்கவில்லை. மரங்களும் புதர்களும் கொண்ட ஆடையினால் அவற்றை அவர் போர்த்தியிருந்தார். மனிதனுடைய அலட்சியத்தினால்தான் மலைகள் காலியாய்விட்டன. காற்றும் மழையும் மதிப்புயர்ந்த அதன் பூசாரத்தைக் கொண்டுபோய் விடும்படி அவன் அனுமதித்துவிட்டான். மீண்டும் மண்பிடிப்பு ஏற்படுவதற்குப் பல யுகங்களாகும். குன்றுகளைப் போலவே, மேய்ச்சல் - தரைகளிலும் புலன்களிலும் மண்ணரிப்பு நீடிக்கிறது. பல பிரதேசங்களில் மழை குறைந்து வருகிறது. பூமிக்குள் இருக்கும் நீரின் மட்டம் அடிக்குப் போய்க்கொண்டேயிருக்கிறது. மழைக்கும், மரம் செடி கொடி விருத்திக்கும் தொடர்பு உண்டு. மரங்களின்மறைவினால் மழை குறைந்துவிட்டது என்பதை நிரூபிக்க முடியாமலிருக்கலாம். ஆனால் குளிர்ந்த நாட்டின்மீது மழைமுகில்கள் மழையாகப் பொழிவதைவிட, உலர்ந்த பாலைவனத்தில் துளிப்பதுகூட ரொம்பவும் கடினம் என்பது வியக்தமான விஷயம்.

பாலைவனம் ஒருகாலும் கடவுளின் சிருஷ்டியே அல்ல என்கிறார்கள். இது அநேகமாய் உண்மைதான். பாலைவனங்கள் மனிதனின் சிருஷ்டிகளாக இருக்கக்கூடும்.

ஆனால் ஒரு விரிவான பிரதேசத்திலிருந்து மனிதன் மரங்களை வெட்டிவிட்டால், காற்று அங்கே முழு வேகத்துடன் அடிக்க முடிகிறது. தடையற்ற இயற்கையின் லீலைகளால் பாலைவனம்

வியாபிக்கிறது. எல்லாப் பாலைவனங்களும் சரித்திர காலத்துக்கு முற்பட்டவை அல்ல என்பதை இன்று அமெரிக்காவில் மேல்மண் வெறும் புழுதியாக இருந்துவரும் பிரதேசங்கள் நிரூபித்து எச்சரிக்கவும் செய்கின்றன. அவை மனிதனுடைய அஜாக்கிரதையின் இப்போதைய சிருஷ்டிகள்.

மனிதனுடைய அஜாக்கிரதையினால் எவ்வாறு பாலை வனங்கள் படர்கின்றன? இந்தியா இன்று கட்டாந்தரையாகி வருவது எங்ஙனம்? இந்தியாவில் குறுகிய காலங்களில் கனமாக மழைப் புயல்கள் அடிக்கின்றன. நெடுநாளுக்கு மழையே கிடையாது. மழையற்ற நாள்களில் மேல்பூமி ரொம்பவும் காய்ந்து போய், மாவுமாதிரி ஆகிவிடுகிறது. இந்நிலையில் பெரிய மழை பெய்தால் மேடு பள்ளமிருக்கும் பிரதேசங்களில் சாசுவதமான பச்சை அடர்ந்திருந்தாலொழிய, மேல்மண்ணை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. புலன்களில் அடர்ந்த சாகுபடி குறுகிய காலத்துக்கு மட்டுமே இருக்க முடியும். ஆகையால், சாகுபடி செய்வதற்கு முன் மேடு பள்ளமாயிருக்கும் புலன்களையெல்லாம் சமப்படுத்த வேண்டும். இந்தியாவில் விரிவான விஸ்தீர்ணமுள்ள சாகுபடி நிலங்கள் இன்னும் சமனாகவில்லை. கொஞ்சங் கொஞ்சமாய் மண்ணும் பூசாரமும் ஏறி வருவதற்குப் பதிலாக, இரண்டும் படிப்படியாய்க் குறைந்து வருகின்றன.

எனவே, இந்திய விவசாயத்தில் அனுஷ்டிக்க வேண்டிய முதல்கொள்கை, சரிவாயுள்ள நிலங்களையெல்லாம் மேடு தாழ்த்தி ஜலம் அரித்துக்கொண்டு போகாமல் தடைகளை அமைப்பதுதான். அவசியமான இடங்களில் உபரியான ஜலம் ஓடுவதற்கு வேண்டிய வடிகால்களை வெட்ட வேண்டும். சில பாகங்களில் இதை நன்குணர்ந்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவின் பெரும்பாகத்தில் மேடு தாழ்த்தி பந்தோபஸ்துச் செய்வது ரொம்பவும் அவசியமாக இருந்து வருகிறது. அதைச் செய்யாததால் அங்கெல்லாம் நிலைமை கொஞ்சங் கொஞ்சமாய் மோசமாகி வருகிறது.

குன்றுகள் மீதும், மேய்ச்சல் - தரைகளிலும், புல் வளரும் காலம் குறுகியதாகவே யிருக்கிறது. எனவே மேய்ச்சலும், கரிப்பதும் கண்டிப்பாய் வரையறுக்கப்பட்டு, பூர்ண ஆதிக்கத்தின்கீழ் இல்லாமற்போனால், மரம் செடி கொடிகள் அழிந்துபோம். மண்ணை மூடியிருக்கும் பசுமை மாய்வதுடன், கால் நடைகளின் கூரிய குளம்புகள் மண்ணை உதிர்த்து விடுகின்றன. மழையும் காற்றும் உதிர்ந்த மண்ணை அடித்துக் கொண்டு போகின்றன. குன்றுகளும் மேய்ச்சல் - வெளிகளும் இவ்வாறு அழிந்துபோய் இந்தியா துரிதமாய்ப் பொட்டலாகி வருகிறது.

மண்ணரிப்பை நிவர்த்திப்பது, அதிர்ஷ்டவசமாகச் சுலபமானது. உஷ்ணப் பிரதேசத்தில் ஆச்சரியமான வேகத்தில் இது சாத்தியம்.

குன்றுகளிலும் மேய்ச்சல் வெளிகளிலும் கால் நடைகளை மேயவிடாதீர்கள். அவற்றைக் கட்டிப்போட்டுப் புல்லையும் இதர தீவனங்களையும் அறுத்துப் போடுங்கள். உடனே வித்துக்கள் முளை கிளம்பிப் புல் அபிவிருத்தி யடைந்து பரவும்.

அலைந்து திரிந்து மேயும் கால் நடைகளைவிட, கட்டுத்தீனி தின்பவை அதிகப் பால் கொடுக்கும். புல்லை அறுத்து, தீவன சாகுபடி செய்யத் தொடங்கினால் மக்கள் நல்ல ஜாதிக் கால் நடைகளின் உற்பத்தியின்மேல் கவனம் செலுத்துவார்கள். இயற்கையாகவே மரம் செடி வளர்ச்சிக்கு மேய்ச்சலும் கரிப்பதும் எவ்வளவு கெடுதலோ, அதேமாதிரிதான் சாகுபடி பயிர்களுக்கும். அரிப்பினால் எல்லா மண்ணும் போய்விடாத மலைச் சரிவில் ஒரு பகுதியைச் சுற்றிச் சுவர் அல்லது வேலி கட்டிப் பார்த்தால் இதன் உண்மை நிரூபிக்கப்படும்.

புலன்களைச் சமப்படுத்தி வரப்புக் கட்டினால் மண்ணில் ஈரம் நிற்கும். மதிப்புள்ள மேல்மண்ணும், அதில் போடும் உரமும் மழையில் அடித்துக்கொண்டு

போகாமல் இருக்கும். இதன் காரணமாக மகசூல் அதிகமாகும். ஒவ்வொரு வருஷமும் பல கோடி டன் அளவுமேல்-மண்ணை மழை அடித்துக்கொண்டு போகிறது. இம்மாதிரி போகும் மண் ஒருகாலும் திரும்பி வருவதில்லை. ஒரு மழை அடித்துக்கொண்டு போகும் மண்ணின் அளவுக்குப் புதிதாக வந்துசேருவதற்கு 100 வருஷங்களாகும். எனவே, இந்தப் பிரச்னையை எவ்வளவுக்கெவ்வளவு துரிதமாகச் செய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு இந்தியப் புலன்களின் வளம் பெருகும். புல்லும் மரங்களும் மேய்ச்சல்-தரைகளுக்கும் காடுகளுக்கும் திரும்பும். உணவு ஸப்ளை பெருகும்.

இந்தியாவின் தலைவிதி அரசியல்வாதிகளின் கையில் இல்லை. அது இந்தியாவின் எண்ணற்ற ஆடு மாடுகளின் பற்களிலும் குளம்புகளிலும் இருக்கிறது. அவற்றை நாம் கட்டுப்படுத்தி வைத்தாலொழிய இந்தியாவை அவை காயவைத்துவிடும். அப்பொழுது நாமெல்லோரும் சேர்ந்து அழியவேண்டியதுதான். இந்தியா இரண்டாவது ஸஹாராகவாக அல்லது மற்றொரு 'கோபி' பாலைவனமாக மாறிவிடும்.







அல்லயன்ஸ்

# புதுப் புத்தகங்கள்

1. திரு. வி. க.—
வாழ்க்கை வரலாறு ... 2 0
2. வஸந்தன் } எஸ்.வி.வி. 2 0
3. புது மாட்டுப் பெண் } எஸ்.வி.வி. 1 2
4. உணவும் சுக வாழ்வும் - டாக்டர் என். சேஷாத்ரிநாதன் .... 1 4
5. இந்திரா } பங்கிம் சந்திரர் ... 1 4
6. ரஜனி ... 1 4
7. மாதங்கினி ... 1 14
8. ஜடாதரன் ... 1 12
முதலிய கதைகள்
ஷி அட்டை பைண்ட் 2 4

அடுத்து வருபவை

1. தேவி சௌதுராணி
2. சந்தனக் காவடி
3. புஷ்ப ஹாரம்
4. எரி நக்ஷத்திரம்
5. இளமைப் பருவம் (மகா கவி டாகுர்)
6. நீலமணி முதலிய கதைகள்
7. கதைக் கோவை 3-ஆம் தொகுதி 60 - எழுத்தாளரின் 60 - சிறுகதைகள்
8. அழகி முதலிய கதைகள்
9. மீட்சி முதலிய கதைகள்

புத்தக ஜாப்தாவுக்கு எழுதிக்கொள்ளவும்.

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் : : சென்னை

# வலை வீச்சு

குளிர்ச்சி மிக்க தேசங்களில் வாழ்கிறவர்களுக்குத் தேவையான அளவு, உடை அலங்காரங்கள் நம் நாட்டினருக்குத் தேவையில்லை. ஆனால், இன்றோ ஆடம்பரத்திற்கென்றும், அலங்காரத்திற்கென்றும் தேவையான அளவிற்கும் அதிகமாக ஆடைகள் நெசவாகின்றன. இவற்றை நெசவு செய்கிற பல ஆலைகளுக்குப் போதுமான பருத்தி கிடைக்கும் பொருட்டுப் பல நிலங்களில் பருத்திப் பயிர் நடைபெறுகிறது. சுருட்டு சிகரெட்டுக்கும், தாம்பூலத்தோடு போட்டுக் கொள்வதற்கும் உபயோகிக்கிற புகையிலை ப்யிரிடும் நிலங்கள் பல. பல வகை யந்திரங்களுக்கும் தொழில்களுக்கும் பயன்படுகிற எண்ணெய்க்காக ஏராளமான நிலக்கடலையை நிலங்களிலே பயிரிடுகிறார்கள். பருத்திப் பயிரைக் குறைத்து, நிலங்களிலே உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாம். புகையிலைப் பயிரை ஒழித்துவிட்டு அந்த நிலங்களிலே உணவுப் பொருள்களைப் பயிரிடலாம். நிலக்கடலைப் பயிருக்குப் பதிலாக, அந்த நிலங்களில் விளையக்கூடிய வேறு தானியங்களைப் பயிரிடலாம். இப்படியே எல்லா நிலங்களிலும் ஆரோக்கியத்துக்குக் காரணமான உணவுப் பொருள்களைப் பயிரிட்டுவிட்டால், பணக்காரர்கள் பணத்தை எப்படிக் குவிக்க முடியும்? பருத்தி விற்றால் பணம், புகையிலை விற்றால் பணம், நிலக்கடலை விற்றால் பணம். விளைகிற பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குகிற தேசங்களுக்கு விற்றால் பணம். இப்படிப் பணத்திற்கு ஆசைப்பட்டு, ஆரோக்கியத்திற்கு அவசியமில்லாத பயிர்களை உற்பத்தி செய்து கொண்டேயிருந்தால், ஏழைகளுக்குப் போதுமான ஆகாரம் எங்கிருந்து கிடைக்கும்?

காப்டன் என். சேஷாத்ரிநாதன் எழுதிய "உணவும் சுக வாழ்வும்" என்ற புதிய புஸ்தகத்திலிருந்து. 'அல்லயன்ஸ்' பிரசுரம்.

மனிதன் யந்திரத்தைக் கண்டுபிடித்தான். பிறகு, தான் கண்டுபிடித்த யந்திரத்திற்கே யந்திரி அடிமையாகிவிட்டான். அப்படியே பணமும் மனிதனால் படைக்கப்பட்டு, இப்போது மனிதனையே அடிமைகொண்டு விட்டது. பொருள் என்றால் மோகனமாகவே தோன்றுகிறது. மனிதருக்குத்தான் என்ன பயபக்தி, என்ன மூடபக்தி, பொருளின் சன்னிதியிலே! ஆனால் பணத்திற்கு அப்படி ஒரு அற்புத சக்தியும் கிடையாது. இந்தியாவின் நிதி-மெய்பருக்கும் பொருளாதார நிபுணர்களுக்கும்தான் இந்த உண்மை தெரியவில்லை. போரின் பயனாக இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலையைப் பாருங்கள்.

பொருளே பிரச்னை அன்று-என்பதை யார் யோசித்துப் பார்க்கிறார்? பிரச்னையெல்லாம் உணவுப் பொருள்தானே. 'அஸெம்ப்ளி" அங்கத்தினர்களுக்கு இன்னும் இது பிடிபடவில்லை. திரு. என். சிவராஜ் ஒருவர்தான் இதைத் தெரிந்து கொண்டிருக்கிறார். அவர் சொன்னார்: "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் ஸ்தானம் எப்படியிருந்தாலும், ஏகாதிபத்தியத்தின் மற்றப் பகுதிகளுக்கிடையே இந்தியாவின் அந்தஸ்து எப்படியிருந்தாலும், ஒன்று நிச்சயம்: அதாவது, இந்தியா இன்று போரில் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியா மீது சுமத்தியிருக்கும் பொறுப்பேயன்றி வேறொன்றுமில்லை. இந்தியாவை யுத்தத்தில் சேர்க்கும் பொறுப்பை வகித்தவர்கள், இந்திய மகாஜனங்களுக்கு உணவுப் பொருள்களைத் தேடிக் கொடுக்கும் பொறுப்பையும் வகிக்கவேண்டியதுதான்." பொருளாதாரப் பேராசிரியர்களும் பண்டிதர்களும் பேசுவதைக் காட்டிலும் எவ்வளவோ புத்திசாலித்தனமான பேச்சு இது.

'போரம்' வாரப் பத்திரிகை(21-11-43)

இந்த இரண்டாவது மகாயுத்தத்தில் அயர்லாந்து நடுநிலைமை நாடாகவிளங்கு கிறது. பிரிட்டனுடன் பல நூற்றாண்டு களாக, அடிமையாகவோ, அல்லது நேசநாடாகவோ உறவுகொண்டாடி வந்த அயர்லாந்து இன்று நடுநிலைமை வகிப் பானேன் என்று கேட்கலாம். டிவே லராவுக்கு நாஜிஸமும் பாஸிஸமும் வேப்பங்காய் என்பதை உலகம் அறி யும்...பிறகு ஏன் அவர் யுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை யென்றால், டிவேலராவே இதற்குப் பதில் கூறி யிருக்கிறார் :

"அயர்லாந்தை இரண்டு துண்டாகப் பிரித்திருக்கிறவரை, ஐரோப்பிய யுத்தம் ஏதாவது ஏற்பட்டால் அதில் அயர்லாந்து கலந்துகொள்ளாது. இதை மிகத் தெளி வாகக் கூறுகிறேன். அயர்லாந்து இரண்டு கூறாக இருப்பதிலிருந்து ஒன்று சேரும் வகையில், வட அயர்லாந்துடன் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் உதவி செய்யவேண்டும். வட அயர்லாந்திலுள்ள தம் நண்பர் களிடமே பிரிட்டிஷ் சர்க்கார் இதை அறி வித்து வசதி செய்யட்டும். அப்பொழுது தான் சுதந்திரமுள்ள அயர்லாந்தை—ஐக் கியத்துடன் நிற்கும் அயர்லாந்தை—நாங் கள் பாதுகாத்து, யுத்தத்தில் கலந்து கொள்ளமுடியும்."

வட அயர்லாந்து அல்ஸ்டர் என்ற நாமத்தின் கீழ் 'பாகிஸ்தான்' பண்ணிக் கொண்டதற்கு பிரிட்டிஷார்தான் காரண மென்று டிவேலரா கருதுகிறார். பிரிட் டன் அயர்லாந்தைத் துண்டாடிவிட் டது என்பது டிவேலராவின் அசைக்க முடியாத நம்பிக்கை...வட அயர்லாந்து தென் 'அயரு'டன் சேர்ந்து, ஐக்கிய அயர்லாந்தென ஏற்படுமா? அயர்லாந்து வாசிகளின் இந்த ஆசைநிறைவேறுமா?- என்பதைக் காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

"அயர்லாந்து" என்ற ஜோதி நிலையப் பிர சுரத்திலிருந்து.

# வரப்பெற்றோம்

1. தமிழிசைப் பாடல்கள் (மூன்றாந் தொகுதி. அண்ணாமலைப் பல்கலைக்கழ கத்தாரால் பிரசுரிக்கப்பெற்றன.)

2. ஸ்ரீ ஸாயி சரித்திர நாடகம் (B. V. நரசிம்மஸ்வாமிகள் எழுதியது. அகில இந்திய ஸாயி ஸமாஜத்தால் பிர சுரிக்கப்பட்டது. விலை ரூ. 1-0-0.

3. கையால் காகிதம் செய்தல் (மு. குருசாமி நாயுடு. ஜூபிடர் டிரே டிங் கம்பெனியால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 10)

## Books Received

1. The Royal Jester or Tenali Raman (by A. S. Panchapakesa Iyer. Published by K. V. Press, Book-depot, Vellore. Price Re 1.)

2. The Ethical Philosophy of Gita (by Srinivasachari M. A. Published by Sri Krishna library, Mylapore. Price Rs. 2.)

3. Subbanna (by Masti Venkatesa Iyengar. Price Rs. 1-4-0)

4. The Philosophy of the beautiful (by P. N. Srinivasachari M. A. Price Rs. 1-8-0)

5. Organization and Organizations (by C. M. Srinivasan.)

# மதிப்புரை

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், இரண்டாம் பதிப்பு ரூ. 1-4-0.

பஜகோவிந்தம், இரண்டாம் பதிப்பு அணு 2½.

ஸ்ரீ முகுந்தமாலை, முதற் பதிப்பு அணு 5.

ஸ்ரீ விஷ்ணு பாதாதிகேசாந்த ஸ்தோத்திரம், முதற் பதிப்பு அணு 8.

[காமகோடி கோசஸ்தானப் பிரசுரங்கள், காமகோடி கோசஸ்தானம், ஸ்ரீ சங்கர மடம், கும்பகோணம்.]

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கி வரும் ஸ்ரீ மதாசார்யாள் லோக க்ஷேமத்திற்காகச் செய்துவரும் அரிய பெரிய காரியங்களில் காமகோடி கோசஸ்தானம் என்ற பிரசுராலயத்தை ஸ்தாபித்ததும் ஒன்றாகும். உலகம் உய்வதற்குத் தர்மமே வழி. தர்மத்தை விளக்குவன வேதம் முதலான ஆன்றோர் மொழிகள். சுருதி ஸ்மிருதி புராணங்களெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையிலிருக்கின்றன. அவைகளைக் கற்றுணர்வதற்கு அப்பாஷைப் பயிற்சி இன்றியமையாதது. அதைச் சுலபமாய்க் கற்கவும், அப்படிக் கற்கும் வாயிலாகவே ஆத்ம சுகத்தை அடையவும் ஒருபெரும் சாதனமாகக் காமகோடிப் பிரசுராலயத்தின் வெளியீடுகள் அமைந்திருக்கின்றன. பக்தியே ஞானத்திற்கு ஆதாரம். ஆகையால் பக்தியைப் பெருக்கும் நூல்களுடனேயே இவ்வெளியீடுகளைத் துவக்க எண்ணிக் கற்றவருக்கும் மற்றவருக்கும் பயன்படும் முறையில் மேற்கண்ட புஸ்தகங்கள் தயாரிக்கப்பட் டிருக்கின்றன.

தேவநாகரி தமிழ் லிபிகளில், மூலம், எல்லாவற்றிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு ஸ்ரீமத் ஆதிசங்கரபகவத்பாதர் எழுதிய பாஷ்யத்தை ஸ்ரீ வே. நாராயணன் M.A., B.L. வெகு நுட்பமாக ஆராய்ந்து அழகாக மொழி பெயர்த்து அரிய குறிப்புகளும் சேர்த்து உதவி யிருக்கிறார். காலஞ் சென்ற மஹாமஹோபாத்யாய எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரியார் தமது ஆங்கில முகவுரையில் பகவந்நாமாவின் மகிமையையும், ஆதிசங்கருடைய பக்தி வைபவத்தையும் தெளிவாக விளக்கி யிருக்கிறார். இவைகளைத் தவிர, பூர்வாங்க சுலோகங்கள் அங்கந்யாஸம், தியான சுலோகங்கள், முதலியனவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாராயணத்திற்காக மூலம் மட்டும் தனியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. கோசஸ்தான வெளியீடுகள் நல்ல கடிதத்தில் ஸ்பஷ்டமாக அச்சிடப்பட்டுச் சித்திரப் படங்களுடன் கூடிக் கண்ணுக்கும் மனத்திற்கும் விருந்தளிக்கின்றன.

விஷ்ணு ஸஹஸ்ரநாமமும் பஜகோவிந்தமும் பிரசுரிக்கப்பட்ட வெகு சில நாளுக்குள்ளேயே அச்சிட்ட புஸ்தகங்கள் ஜாடாவும் விற்பனையாகி இரண்டாம்பதிப்புக்கு அவசியம் ஏற்பட்டுவிட்டது என்பதிலிருந்தே இப்புஸ்தகங்களின் அருமையை ஒருவாறு உணரலாம். முதற் பதிப்பைத் தம் பொறுப்பில் அச்சிட்டுப் பிறகு ஸ்ரீமத் காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞையின்படி காமகோடி கோசஸ்தானத்தைத் துவக்குவதற்குப் பேருதவி புரிந்து, இப்புஸ்தகங்களையும் அதற்கே அர்ப்பணம்செய்த ஸ்ரீ பி. ஜி. பால் கம்பெனியின் சொந்தக்காரரான ஸ்ரீ டி. பாலசுப்பிரமணிய ஐயரின் ஆசாரிய பக்தியும் தெய்வ பக்தியும் மெச்சத் தக்கன. ஸ்ரீ பஜகோவிந்தம் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர் பி.ஏ., எம்.எல். எழுதிய தமிழ் - அநுவாதத்துடனும் குறிப்புரையுடனும் கூடியது.

ஸ்ரீமுகுந்தமாலை, மகாகவியும் ஆழ்வார்களில் ஒருவருமான குலசேகரப் பெருமாள் மகாராஜாவால் செய்யப்பட்டது. பக்திபரவசத்திலும் சொல்வன்

மையிலும் கிருஷ்ணகர்ணாம்ருதத்திற்கு இதை ஒப்பிடலாம். கவிஹ்ருதயத்தை நன்குணர்ந்து ரஸிகர்கள் அனுபவிக்கும்படி எடுத்துக் காட்டுவதில் ஸமர்த்தரான ஸாஹித்யவல்லப சீர்காழி ஸ்ரீ ஸுந்தராசாரியார் பி.ஏ., பி.எல். இந்த அற்புத ஸ்தோத்திரத்திற்குத் தமிழ் மொழிபெயர்ப்பும் குறிப்புரையும் செய்து உதவியிருக்கிறார். ப்ரபத்தி மார்க்கத்தின் இரகசியங்களை ஆங்காங்கு உசிதமாக வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

ஸகுணோபாஸனையில் பகவானுடைய லீலாவிபூதிகளின் வருணனையும், திவ்ய மங்களஸ்வரூபத்தின் வருணனையும் முக்கியமான அம்சங்கள். இந்த ரீதியில் செய்யப்பட்ட ஸ்தோத்திரங்களில் ஆதிசங்கருடைய விஷ்ணுபாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் சிகரம் போன்றது. தமிழில் பதவுரையும், தமிழ் ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் அநுவாதமும் செய்து உதவியவர்கள் ஸ்ரீ பண்டித ஏ. எம். ஸ்ரீநிவாஸாசாரியாரும் ஸ்ரீ வே. நாராயணனும். பெடரல் கோர்ட்டு ஜட்ஜ் கனம் ஸர் எஸ். வரதாசாரியார் தமது முன்னுரையில், அர்ச்சாவதாரத்தின் மகிமையையும், அத்வைத ஆசார்யரான ஸ்ரீ ஆதிசங்கரர் தம் ஸித்தாந்தத்திற்கு விரோதமில்லாமலே, நாம ஸங்கீர்த்தனம் பக்தித்வாரா ஞான ஸாதகமென்று இந்த ஸ்தோத்திரத்தில் பிரகடனம் செய்திருப்பதையும், அழகாக விரித்துள்ளார்கள்.

சோபையுள்ள முகத்திற்குத் திலகம் போல், மேற்கண்ட புஸ்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீமத் காமகோடி பீடாதிபதிகளான ஆசார்யாள் அருளிய ஸ்ரீமுகம் விளங்குகிறது.

'கௌண்டின்யன்'

**லக்ஷ்மி கடாக்ஷம் முதலிய கதைகள்** (ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது. அல்லயன்ஸ் பிரசுரம். விலை ரூ. 1-8-0)

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸனின் கதைகளே ஒரு தனிவகை. கஷ்டமான சமாசாரங்களைப் பேச்சு நடையில், சரளமான தமிழில், எழுதும் பெரிய எழுத்தாளர் கூட்டத்தில் இவரும் சேர்ந்தவர். இப்புத்தகத்தில் காணப்படும் பதினாலு கதைகளும் ஏற்கெனவே நாம் வெவ்வேறு பத்திரிகைகளில் படித்து அனுபவித்தவைதான். ஸ்ரீ. கி. வா. ஜகன்னாதன் முன்னுரையில் கூறுகிறபடி, "மயிர் சிலிர்க்கும் வீர நிகழ்ச்சிகளையோ, கண்ணீர் விடும் துக்கக் காட்சிகளையோ" இக்கதைகள் கூறவில்லை. ஆனால் தினசரி ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படக்கூடிய சம்பவங்களை அழகாகச் சித்திரிக்கின்றன. பொதுவாக எல்லோரும், முக்கியமாக ஒவ்வொரு பெண்மணியும் பொழுதுபோக்காகப் படித்துப் பார்க்கவேண்டிய கதைப் புஸ்தகம் இது.

"மூர்த்தி"

**உணவும் சுக வாழ்வும்** (காப்டன் என். சேஷாத்ரி நாதன் எழுதியது. மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிட்டது. விலை ரூ. 1-4-0.)

இந்த யுத்த காலத்தில், உண்மைச் செய்திகளைக் கேட்பது எவ்வளவு அருமையோ, அவ்வளவு அருமையாக இருக்கிறது, புதிய தமிழ் வெளியீடுகளில் சிறந்த உபயோகமுள்ள தமிழ்ப் புஸ்தகங்களைப் பார்ப்பதும். இத்தகைய அருமையான புஸ்தகங்களில் ஒன்று இது.

யுத்தமில்லாத சாதாரண காலங்களிலேயே, ஸத்தான உணவுப் பொருள்கள் அதிகமாக நம்மவருக்குக் கிடைப்பதில்லை. இந்த யுத்த நெருக்கடியிலோ, மற்றக் காலத்தில் கிடைத்த உணவுப் பொருள்களும், நம்மில் நடுத்தர வகுப்பினருக்குக்கூடக் கிடைப்பதில்லை. இதனால் 'உணவின் மூலமாகக் கிடைக்கவேண்டிய மூலாதாரச் சத்துக்களைச் சரியான அளவிலே உட்கொள்ள முடிய'வில்லை. ஆகவே பொதுஜன சக்தியும் ஆரோக்கியமும் குறைந்து சில நோய்கள் பரவுகின்றன; இன்னும் பரவக்கூடும். அந்த நோய்

களால் பொதுஜனப் பிராணசக்தி பின்னும் குன்றிப்போகும். அத்தகைய நோய்களைத் தடுப்பது, அன்னியர் படையெடுப்பைத் தடுப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது. ஆகவே, "அன்ன விசாரம் அதுவே விசாரம்!" என்பது இன்று போல் இவ்வளவு உண்மையாக என்றும் இருந்ததில்லை; அந்தப் பட்டினத்துப் பிள்ளையார் காலத்திலும் இருந்திருக்கமுடியாது!

நமது உணவுப் பிரச்னைகளின் நிலைமையில் இப்போது ஏற்பட்டுவரும் மாறுபாட்டைக் கவனித்து ஜனங்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டுவது அறிஞர் கடமையாகும். "அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருப்பதால் மட்டும் பயனில்லை. உணவுப் பொருள்களை ஏராளமாக விளைவிக்க, இங்கிலாந்து முதலான இடங்களில் அரசாங்கமே முன்வந்து வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் தேசிய அரசாங்கமன்று: எனவே அத்தகைய ஏற்பாடுகளை இந்த நாட்டிலே சர்க்காரால் திறமையாகவும் விரைவாகவும் சிரத்தையாகவும் கையாள முடியாது. "கள்ளிலே உணவுச் சத்து இருக்கிறது; 'வைட்டமின்' இருக்கிறது!" என்று பிரசாரம் செய்து கள்ளுக்கடைகளைத் திறந்து வைப்பதிலேதான் சிரத்தையையும் விரைவையும் எதிர்பார்க்கலாம்.

இந்த நிலையில், நமது ஜனங்களின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத மூலாதாரச் சத்துக்களும், 'வைட்டமின்கள்' என்ற ஆகார அம்சங்களும் உள்ள உணவுப் பொருள்களில் நமது நாட்டிலே இப்போது கிடைப்பனவற்றைப் பரிசீலனை செய்து புஸ்தகங்கள் எழுத வேண்டியது நல்லறிஞர் கடமை. இத்தகைய கடமையை ஓரளவு இச்சிறு நூல் மூலமாக டாக்டர் சேஷாத்ரிநாதன் செய்திருக்கிறார்.

இந்நூலில் "வைட்டமின் சம்பாஷணை" என்ற பகுதி தமிழ்ப் பெண்களுக்கென்றே விசேஷ சிரத்தையுடன் ரஸமாக எழுதப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து, உணவு வகைகள் தயாரிக்கும் பாகசாஸ்திர ரீதியிலும் டாக்டர் சேஷாத்ரிநாதன் ஒரு நூல் எழுதுவாரென்று எதிர்பார்க்கிறேன். அந்த நூல் மூலமாக, உணவுச்சுவையை அனுபவிப்பது போல் அந்தத் தமிழ்ச்சுவையையும் அனுபவிக்கும்படி அவ்வளவு ரஸமாக எழுதி விடுவாரென்றே நம்புகிறேன்.

இத்தகைய பிரசுரங்கள் தமிழ் மக்கள் அனைவருக்கும் பயன் தரும் என்று சொல்லமுடியாது. படித்த, நடுத்தர, வகுப்பினருக்கே பயன் தருவன ஆகும். எனவே, அவ்வகுப்பினரிலாவது எல்லாரும் வாங்கி வாசித்துப் பயன் பெற வேண்டும் என்பது என் விருப்பம்.

அத்தகைய வகுப்பினருக்கு டாக்டர் சேஷாத்ரிநாதனும் அல்லயன்ஸ் கம்பெனியாரும் காலம் பார்த்துச் செய்த இந்த உபகாரத்திற்காக, அவர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பி. ஸ்ரீ.



# மைசூர் மரச் சாமான்கள்

பார்வைக்கு அழகையும் ஒற்றுமையையும், உடம்பிற்கு முழுசௌக்கியத்தையும், பழக்க வழக்கத்தில் உபயோகத்தையும் ஒட்டி, இவைகளை பொறுக்கியெடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மர சாமான்களின் உயர்தரத்தையும், அழகையும் ஒட்டிப்பார்த்தால், இவைகளின் விலை மிகக் குறைவு.

புது முறைகளில் உயர்தர மரச் சாமான்கள்
ரோஸ் உட், வெள்ளை ஸிடார் *etc.*

**எங்கள் காட்சி சாலைகளில் எப்பொழுதும் மெத்தை போட்ட பார்வையான சாமன்கள் கிடைக்கும்.**

முழு விவரங்களுக்கும், விலைக்கும் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்:

---

சூபரின்டேண்டன்ட்,

சாமராஜேந்தர டெக்னிகல் இன்ஸ்டியூட்,

**மைசூர்.**




மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

# மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்


Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras. Printed by T. V. Volaganatha Mudaliar Sadhu Press, 12, Gan[illegible]pathy Mudali Street, Roya[illegible]ah, Madras.